Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Fast Track Classes

Start On :- 13,15.07.2006

DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN AutoCAD

Softview Computer College

Head Office :- 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | ஆனி 24 | ஹிஜ்ரி 1427 | ஜ ஆகிர் 10 | (09.07.2006) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 281

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் மாபெரும் பேரணி!

சென்னை

ஈழத்தமிழர் பாதுகாப்பை வலியுறுத்தி சென்னையில் அனைத்துக் கட்சிகளும் நடத்திய மனிதநேயப் பேரணியில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்று ஆதரவுக்குரல் எழுப்பினர்.

நேற்றுமாலை 3 மணிக்கு பேரணி புறப்படும் என அறிவித்திருந்தபோதும் தொண்டர்களின் தொடர் வருகை காரணமாக மாலை 4.30 மணிக்கு புறப்பட்டது. பேரணியை தொல். திருமாவளவன் தலைமையேற்று நடத்த தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் முன்னிலை வகித்தார்.

பேரணியில் டொக்டர் ந.சேதுராமன், பசீர் அகமது, நடிகர் மன்சூர் அலிகான், அரிமாவளவன், ஓவியர் புகழேந்தி, மனிதம் அக்னி சுப்பிரமணியம், ஓவியர் வீரசந்தானம் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

பேரணியில் விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழர் களம், மனிதம் — மனித உரிமை அமைப்பினர், தமிழீழ விடியல் இன்னும் பல அமைப்புக்கள் கலந்துகொண்டன. மேடை அமைக்கப்பட்ட வளாகத்தில் தேனிசை செல்லப்பா குழுவினர் ஈழ எழுச்சிப் பாடல்களை ஆரம்பம் முதல் இசைத்து வந்தனர்.

கூடியிருந்த தொண்டர்கள் ஆட்டம் ஆடி, பாட்டுப்பாடி வழிநெடுக உற்சாகத்தோடு வந்த வண்ணம் இருந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## உதைக்கப்போவது யாரு?



இன்று உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெறவுள்ள பேர்ளின் அரங்கத்துக்கு முன்னே போட்டியில் பயன்படுத்தப்படவுள்ள பந்து.

## அல்லைப்பிட்டி பகுதியில் கரையொதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம்

அல்லைப்பிட்டி கடற்கரையோரத்தில் நேற்று உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

25 முதல் 35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே கரையொதுங்கியதாக கருதப்படுகிறது.

சடலம் நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் ஊர்காவற்துறை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## காணாமற்போன 9 இளைஞர்கள் தென்பகுதி சிறைச்சாலைகளில்!

யாழ்ப்பாணம்

காணாமற்போனதாக கருதப்பட்ட 9 தமிழ் இளைஞர் யுவதிகள் தென்பகுதியிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் காணாமற்போன இந்த ஒன்பது பேரும் தென்பகுதி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விபரம் வருமாறு -

கொடிகாமத்தில் ஜூன் 27 இல் கைதான இராசையா ஆனந்தராஜா.

## கடற்படை உளவாளி சுட்டுக்கொலை!

கொழும்பு

புத்தளம் - கற்பிட்டியில் கடற்படையினருக்குத் தகவல் வழங்கும் தமிழ் இளைஞர் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் மாதோட்டம் என்ற இடத்திலுள்ள வீட்டிலிருந்த 27வயதுடைய மேற்படி இளைஞரை வெளியே அழைத்த இனந்தெரியாத

யொதுங்கியது.

25 முதல் 35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே கரையொதுங்கியதாக கருதப்படுகிறது.

சடலம் நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் ஊர்காவற்துறை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## புளொட் உறுப்பினர் மீது யாழ்.நகரில் சூடு !

யாழ்ப்பாணம் —

யாழ். நகரில் இனந்தெரியாத நபர்கள் நேற்றுக்காலை நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் புளொட் உறுப்பினர் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள சைக்கிள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம் —

கிளாலி முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளுக்கு அண்மையில் பொறி வெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 1.40மணியள வில் இடம்பெற்ற இந்தச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னேரியாவிலும் கண்ணிவெடி!

பொலநறுவ —

மின்னேரியவில் உள்ள 23 ஆவது டிவிசன் தலைமையகத்துக்கு அண்மையில் நேற்றுப்பிற்பகல் சக்திவாய்ந்த கண்ணிவெடி ஒன்று மீட்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் —

காணாமற்போனதாக கருதப்பட்ட 9 தமிழ் இளைஞர் யுவதிகள் தென்பகுதியிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட மூவரும், கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்களுமே இவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் காணாமற்போன இந்த ஒன்பது பேரும் தென்பகுதி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.


இவர்களின் விபரம் வருமாறு -

கொடிகாமத்தில் ஜூன் 27 இல் கைதான இராசையா ஆனந்தராஜா.

மே 6 இல் கொழும்பில் கைதான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை ஜனந்தன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவுக்காக மங்கள சீனாவுக்கு பயணம்



கொழும்பு —

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவிடம் ஆயுத உதவிகளை கோருவதற்காக எதிர்வரும் புதன்கிழமை பீஜிங் செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்கும் பிரதான நாடான சீனாவுக்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் புதன்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது மங்கள சமரவீர - புலிகளுடனான போர் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வது குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

ஏற்கனவே சீனாவிடமிருந்து கடற்படைக்கென 30 மி.மீ பீரங்கிகளை வாங்கவுள்ளதாக தகவல்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதிக்கு ஊடுருவிய கருணாகுழு உறுப்பினர் கைது!

திருகோணமலை —

திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஈச்சிலம்பற்றில் தாக்குதல் நடத்துவதற்காக ஊடுருவிய கருணா குழு உறுப்பினர் ஒருவர் கிளைமோர் குண்டுடன் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் ஈச்சிலம்பற்று பகுதியில் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களைக் கொல்லும் நோக்குடன் ஊடுருவிய ஜெயா என்று (10 ஆம் பக்கம் பார்க்க)

ருக்குத் தகவல் வழங்கும் தமிழ இளைஞர் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் மாதோட்டம் என்ற இடத்திலுள்ள வீட்டிலிருந்த 27வயதுடைய மேற்படி இளைஞரை வெளியே அழைத்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

அம்பாறை —

அம்பாறையில் நேற்றிரவு குடும்பஸ்தர் ஒருவர் ஆயுதக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆலையடிவேம்பைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கணேசன் தெய்வேந்திரம் (வயது 38) என்பவரே நேற்றிரவு 7 மணியளவில் வயல் வேலை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது சடலம் கல்முனை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறையில் 2 படையினர் காயம்!

வடமராட்சி —

பருத்தித்துறையில் வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருபடையினர் காயமடைந்தனர்.

பருத்தித்துறை - தட்டாதெருச் சந்தியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து பருத்தித்துறை நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அந்தப் (10 ஆம் பக்கம் பார்க்க)




# உணவுக்குள் உதைபந்தாட்டம்

உலகக்கிண்ணப் போட்டிகள் உலகம் முழுவதையும் ஏதாவது ஒரு வகையில் ஆக்கிரமித்தே உள்ளது. எல்லாம் உதைபந்தாட்டம், எதிலும் உதைபந்தாட்டம், எதற்கும் உதைபந்தாட்டம் என்று உலகமாகிவிட்டது. இந்த நிலையில் இந்தியாவில் இருந்து வரும் செய்தியொன்று சுவையாக இருக்கிறது.

கொல்கத்தாவிலுள்ள ஒரு உணவகத்தில் உணவுப் பட்டியலைப் பார்த்தால் அநேகமான வித்தியாசமான உணவுகளுக்கு முன்னால் நட்சத்திர உதைபந்தாட்ட வீரர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக பெக்கம் மீன்பொரியல். றொனால்டோ ரோஸ்ட் என்று போகிறது.

பல உணவகங்களின் நுழைவாயில்கள் கோல்போஸ்ட்டுகள் மாதிரியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பாக பெங்கால் தாஜ் ஹொட்டேலைக் குறிப்பிடலாம். இங்கு சைவ, அசைவ உணவுககள் கிடைக்கும். விசேட சமையல்காரர்கள் ஜேர்மனியில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இன்னொரு உணவகம் உதைபந்தாட்ட மைதானம் போலவே மாற்றி




அமைத்திருக்கிறார்கள். இங்கு உணவு மரிமாறுபவர்கள் பெக்கம், சிடேன், றொனால்டோ போன்றவர்கள் அணியும் ஜேர்ஸி போலவே அணிந்துள்ளார்கள். பெயர்களும் நட்சத்திர வீரர்களின் பெயராக மாற்றப்பட்டுள்ளதாம்.

வாடிக்கையாளர்கள் மேசையில் இருக்கும் மஞ்சள் அட்டையைத் தூக்கிக் காண்பித்தால் - பெக்கம், சிடேன், றொனால்டோ யாராவது ஒருவர் வாடிக்கையாளரிடம் விரைந்து வருவார்கள். வாடிக்கையாளர்கள் சாப்பிட்டு முடிந்ததும், சிவப்பு அட்டையைத் தூக்கிக் காட்டினால்போதும் பரிமாறுபவர் உடனே இவரது பில் தயாரித்துக் கொண்டுவருவார்.

உணவுகள் தவிர, பான வகைகளுக்கும் (மென், கடும்) வீரர்களின் பெயர்தான். தங்களுக்கு விருப்பமான வீரரின் பெயரில் உள்ள பானத்தை வாங்கி அருந்திவிட்டு, தனக்குப் பிடிக்காத அணி வீரரின் பெயர் கொண்ட பானத்தை அருந்துபவருக்கு நல்ல உதையும் கொடுக்கலாம்.

இவற்றை எழுதும்போது, நமது வாய்ப்பற்றுப்போன சூழ்நிலை கவலையைத் தருகிறது. கொல்கத்தாப் பாணி உற்சாகங்கள் இங்கும் இருந்திருக்கும். றொனால்டோ கொத்து, பெக்கம் புரியாணி, மனிஷ் மிக்சர், றொனால்டினோ றொட்டி, சிடேன் முறுக்கு என்றெல்லாம் சுவைத்திருக்கலாம். சந்தர்ப்பம் இல்லாமல்போய் விட்டது.

## இன்றைய ஆட்டம்

### இறுதியாட்டம்

**இத்தாலி - பிரான்ஸ் (பேர்ளின் 11.30)**

# தேசிய கீதம் பாடவா கேட்கவா விருப்பம்?

ஸ்கொலாரி என்பவர் யார் என்று மீண்டும் மீண்டும் விளம்ப முயன்றால், ரசிகர்களின் கோபக்கணைக்கு ஆளாக நேரிடும். போர்த்துக்கல் அணியினருடன் உலகக்கிண்ண சுற்றுப்போட்டியின் பின்பும் தான் தொடர்ந்து இருக்கப்போவதாக இவர் அறிவித்துள்ளார்.

போர்த்துக்கல் ஊடகங்கள் பயிற்றுனர் பதவியிலிருந்து இவர் விலகக் கூடும் என்று செய்திகளை வெளியிட்டிருக்கும் நிலையிலேயே ஸ்கொலாரி தான் இரண்டு வருடகாலத்திற்கு ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் நோக்கத்தில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, எனது தாயகமான பிரேஸில் என்னை அழைக்குமாயின் அவசியம் அதனை நான் கருத்தில் கொள்வேன் என்றும் கூறியிருக்கிறார். மேலும், போர்த்துக்கல் உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கில்பேர்ட்டோ மாடெய்ல் கருத்துக்கூறும் போது-

ஸ்கொலாரி விலகுவது பற்றிய செய்தியே எனக்குச் செய்தியாகத் தான் இருக்கிறது. ஆனாலும், நான் அறிந்த வரையில் அவர் எங்களுடன் இருக்கவே விரும்புகிறார் என்று என்னால் கூறமுடியும் என்று கூறுகிறார். மேலும், நானும் போர்த்துக்கேயரும்



அவர் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறோம் என்கிறார்.

போர்த்துக்கல் உலகக்கிண்ணப் போட்டிகளில் நாற்பது வருட காலத்தில் மிகத்திறமையைக் காட்டியது 2006 இல்தான். ஸ்கொலாரியின் வழிகாட்டலில் தான் அவர் இப்படிக் கூறி முடிக்கிறார்.

பணம் தான் எல்லாம் என்பதல்ல. நல்ல சூரிய வெளிச்சத்தில் கடற்கரையோரம் சென்று உல்லாசமாக சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும். அதெல்லாம் எனக்குப் போர்த்துக்கலில் நிறைவுறக் கிடைக்கிறது என்கிறார் இந்தத் தென்னமெரிக்க ஐரோப்பியர்.



பிரான்ஸ் அணி






இத்தாலி அணி

# பெனால்ரி ஒரு தொடர்கதை

பிரான்ஸ், போர்த்துக்கல் அணிகளுக்கிடையில் நடந்தது அரையிறுதிப் போட்டியா அல்லது அரைகுறைப் போட்டியா என்று வினா எழுப்புகின்றவர்கள் பலர்.

காரணம் ஒரே ஒரு பெனால்டி 33 ஆவது நிமிடம் உள்ளே வெளியே நிலையை நிர்ணயித்துவிட்டதுதான். இங்கு பெனால்டி கோல் பெறப்பட்டது என்பதல்ல பிரச்சனை. அது பெனால்டியா என்பது தான் பிரச்சினை.




தியரி ஹென்றி அருமையான சந்தர்ப்பம் பெற்றது உண்மை. அதைத் தடுக்க கார்வால்ஹோ முயன்றதும் உண்மை. ஆனால், கார்வால்ஹோ இவரை விழுத்தவில்லை என்பதும், தியறியே முதல் விழுந்தவர் என்பதும் தியறியின் கால்பட்டுத்தான் கார்வால்ஹோ விழுந்ததாகவும் RE-PLAY காட்டுகிறதே அதற்கு பிரச்சினை. இதுபற்றி ஆழமான காய்களெல்லாம் கருத்துக் கூறிமுடித்துவிட்டன. ஆனால், முடிந்த கதை முடிந்தது தான். ஆனால் பெனால்ரி.

முன்னதாக போர்த்துக்கல் 1984, மற்றும் 2000 ஆம் ஆண்டு யூரோ கிண்ணப் போட்டிகளில் பெனால்ரி முறையில்தான் பிரான்ஸிடம் தோற்றது. இம்முறை பெனால்ரி என்னும் பேயால் போர்த்துக்கல் வெளியேறிய போது, பயிற்றுநர் ஸ்கொலாரி, தென் அமெரிக்க பயிற்றுனர்கள் நல்ல ஆட்டங்களையெல்லாம் இப்படித் தான் கொலை செய்வார்கள் என்றார் கடுப்புடன்.

போர்த்துக்கல் அணித்தலைவர் பியூகோ, எதிரணி பலம் குறைந்ததாக இருந்தாலும் சந்தர்ப்பங்கள் சரியாக வாய்க்கும்போது வெற்றி காண்கிறார்கள். இங்கும் அதுவே நடந்தது என்கிறார்.

தற்போது இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ள இத்தாலியும் பெனால்ரி தேவதையின் அருளால்தான் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது. அதுவும் தொண்ணூறாவது நிமிடத்தில் இந்தப் பெனால்ரியும் ரசிகர்களை, மத்தியஸ்தரின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துவிட்டது. ஆச்சரியமாக அல்ல, ஆதங்கத்துடன்.

பெனால்ரி என்றவுடன் முதலில் நினைவுக்கு வருபவர் கோல் காப்பு வீரர்தான். ஒரு கணத்தில் ஒரு ஆட்டத்தைக் காக்கும் சகல பொறுப்பும் இவரின் தலை மீது விழுந்து விடுகிறது.

பெனால்ரி உதையை மேற்கொள்வதும், ஒரு தொழில்நுட்பம். அதனைத் தடுப்பது என்பதுவோ உயர் தொழில் நுட்பம். எனவே இதற்கு கோல் காப்பு வீரர் ஏச்சுப் பேச்சுக்குள்ளாவதில்லை. பெரும் அனுதாபத்தை மட்டுமே பெற்றுக் கொள்கிறார். உண்மையில் மத்தியஸ்தர் தான் இங்கு மையப் பொருளாக விடுகின்றார். ஐம்பது வீதம் நன்றி சொல்லும் போது மற்றைய ஐம்பது வீதம் பகைமை பாராட்டுகிறது.

எனவே, மத்தியஸ்தரின் கடமை மிகக்கடினமாகின்றது. இதனால் மத்தியஸ்தர் இப்படியான தீர்ப்புக்களை வழங்குவதில் மிகக்கவனமாக இருக்கவேண்டியநிலை ஏற்படும்.

அவுஸ்திரேலியாவும், போர்த்துக்கல் அணியும் கண்ணீர் விடக் காரணமாகிப் போனவர்கள் மத்தியஸ்தர்கள் என்றதொரு கருத்து வலுவானதாகவே உருவாகிவிட்டது. பெனால்ரி இல்லாமல் போகப்போவதும் இல்லை. சர்ச்சைகள் இல்லாமல் போகப்போவதும் இல்லை. இதற்காக உன்னதமான உதைபந்தாட்டம் இல்லாமல் போகப்போவதும் இல்லை.

# நீங்களும் FIFA இல் ஒருவர்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டன. 2006 இல் முப்பத்தியிரண்டு அணிகள் கலந்துகொண்டன. ஒவ்வொரு அணியும், ஒவ்வொரு அணி வீரருமாக அத்தனை பேரும் பூதக்கண்ணாடி கொண்டு பார்க்கப்பட்டார்கள், வகைப்படுத்தப்பட்டார்கள். கணிப்பீடு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டார்கள். இறுதியாக இத்தனை பேரிலிருந்தும் FIFA உலக உதைபந்தாட்ட அணியொன்றைத் தெரிவு செய்வார்கள்.

FIFA இன் தெரிவுக்குழு 23 பேர் கொண்ட அணியொன்றை இப்போது தெரிவு செய்துள்ளது. இந்த இருபத்து மூன்று பேரிலிருந்து இறுதிப் போட்டியில் சந்திக்கப்போகும் இத்தாலியில் இருந்து ஏழு பேரும், பிரான்சிலிருந்து நான்கு பேரும் அடங்குகிறார்கள்.

கலந்துகொண்ட ஆசிய அணிகளிலிருந்தோ, ஆபிரிக்க அணிகளிலிருந்தோ யாரும் தெரிவு செய்யப்படவில்லை என்பது மனவருத்தமானது தான்.

**- கோல் காப்பு வீரர்கள் -**

| | |
|---|---|
| கியான்லூகி புபோன் | (இத்தாலி) |
| ஜென்ஸ் லேஹ்மன் | (ஜேர்மனி) |
| ரிக்கார்டோ | (போர்த்துக்கல்) |

**- பாதுகாப்பு வீரர்கள் -**

| | |
|---|---|
| றொபேட்டோ அயாலா | (ஆர்ஜென்ரீனா) |
| ஜோன் ரெரி | (இங்கிலாந்து) |
| லிலியன் துராம் | (பிரான்ஸ்) |
| பிலிம் லாம் | (ஜேர்மனி) |
| பேபியோ கனவாரோ | (இத்தாலி) |
| கியான் லூக்கா ஜம்பரோட்டா | (இத்தாலி) |
| கார்வால்ஹோ | (போர்த்துக்கல்) |

**- மத்திய வரிசை -**

| | |
|---|---|
| ஜே.றொபேட்டோ | (பிரேசில்) |
| பட்ரிக் வியரா | (பிரான்ஸ்) |
| சினேடின் சிடேன் | (பிரான்ஸ்) |
| மைக்கல் பலக் | (ஜேர்மனி) |
| அன்ரீ பில்லோ | (இத்தாலி) |
| கெனாரோ கட்டுஸோ | (இத்தாலி) |
| லூயிஸ் பிகோ | (போர்த்துக்கல்) |
| மனிஷ் | (போர்த்துக்கல்) |

**- முன்வரிசை -**

| | |
|---|---|
| ஹேர்மன் கிரெஸ்போ | (ஆர்ஜென்ரீனா) |
| தியரி ஹென்றி | (பிரான்ஸ்) |
| மிரொஸ்லவ் குளோஸ் | (ஜேர்மனி) |
| பிரான்ஸிஸ்கோ டொட்டி | (இத்தாலி) |
| லூக்கா ரோணி | (இத்தாலி) |


இந்த அணியின் தலைவர் யார் என்பது தெரியப்படுத்தப்படவில்லை.

அதேவேளை, முகாமையாளர், பயிற்றுனர் யாரும் நியமிக்கப்படவும் இல்லை. இங்கு வாசகராகிய உங்களுக்குப் பூரண சுதந்திரமும், அங்கீகாரமும் வழங்கப்படுகிறது.

நீங்களே உங்களை முகாமையாளர், பயிற்றுனர் பதவிக்கு நியமித்துக்கொண்டு - இந்த அணியின் தலைவரையும் தெரிவு செய்து விடுங்கள். கவலைப்படவேண்டாம், FIFA இதனைப் பெரிதாகக் கண்டுகொள்ளாது.

# இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை பேணுவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு

## என்கிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு—

அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் வருத்தம் தெரிவிக்கும் அளவுக்கு வந்திருப்பது விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்திருப்பதையே புலப்படுத்துகிறது.

அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் இந்தியாவுடன் அரசியல் தொடர்பான விடயத்தில் நலனைப் பேணுவதன்மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்.

தீர்வு என்பதை இரு தரப்பினரும் புரிந்துணர்வுடனும், விட்டுக்கொடுப்புடனும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய ஓர் விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈழத்தமிழ் சிறுவனை தாக்கிய பொலிஸார்!

இராமேஸ்வரம்—

மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழ் சிறுவனை பொலிஸார் தாக்கியதால் அகதிகள், மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு மறியலில் ஈடுபட்டனர்.

மண்டபம் அகதிகள் முகாம் பாதிரியார் அகஸ்டின் என்பவரின் மொபைல், வீடியோ கமரா மற்றும் பணம் காணாமல் போய்விட்டதாக முகாம் பொலிஸில் புகார் செய்தார். இதனை முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழ் சிறுவனான தியாகராஜன் மதுசன் (வயது 7) என்ற சிறுவன் திருடியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் முகாம் பொலிஸார் சிறுவனை அடித்தனர். இதனால் மதுசன் படுகாயமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து முகாமில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான அகதிகள் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

இதையறிந்த எஸ்.பி.மகேந்திரகுமார் ரத்தோர் அகதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். முகாம் இன்ஸ்பெக்டர் மாறன் சிறுவன் என்றும் பாராமல் பயங்கரமாகத் தாக்கியுள்ளார். அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மறியலால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# உயிருக்குப் போராடும் முருகனுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க வேண்டும்

## உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

சென்னை—

உண்ணாவிரதம் இருந்து உயிருக்கு போராடும் ராஜீவ்காந்தி கொலைக் கைதியான முருகனுக்கு பாதுகாப்பு அளித்து சிகிச்சையளிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தூக்கு தண்டனையை எதிர்த்து அவர் தாக்கல் செய்த கருணை மனு இன்னும் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர் நளினி. இவர் முருகனின் மனைவி ஆவார். இவர்களது மகள் அரித்ரா இலங்கையில் வசித்து வருகிறார்.

அரித்ராவுக்கு இந்தியாவில் தங்கிப் படிப்பதற்கு இந்திய அரசு விசா வழங்கவில்லை. எனவே, கடந்த 25 ஆம் திகதி முதல் முருகன் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இந்தச் சூழ்நிலையில் சென்னையைச் சேர்ந்த புகழேந்தி, சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது -

சிறையில் இருக்கும் முருகனை பார்க்கச் சென்றேன். ஆனால், அனுமதி வழங்கப்படவில்லை.

அவர் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார். தண்ணீர் கூடக் குடிப்பதில்லை. எனவே, அவர் உடல் மிகவும் மோசம் அடைந்த நிலையில் உள்ளது.

எனவே, தேவையான நடவடிக்கை எடுத்து அவரது உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் அரசுக்குத் தந்தி கொடுத்தேன். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உயர் நீதிமன்ற உதவியை நாடி வந்துள்ளேன். முருகனை உயர்நீதிமன்றில் ஆஜர்படுத்தி அவருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கி, அவரது உயிரை பாதுகாக்கத்தக்க மருந்துவ சிகிச்சையளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு நாளை விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வடக்கு - கிழக்கை பிரிக்க காவி உடையினர் முயற்சி!

## மகேஸ்வரன் தெரிவிப்பு



கொழும்பு—

வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கான பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் முன்வைக்க காவியுடை தரித்தவர்கள் முயன்று வருகின்றனர்.

அத்தகைய பிரேரணை கொண்டு வரப்படுமானால் புலிகளுடன் இணையும் தமிழர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

அரசாங்கம் எனும் படகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காப்பாற்ற வேண்டுமானால் காவி உடை தரித்தவர்களையும், 38 எலிகளையும் நடுக்கடலில் இறக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனது இனிய நண்பர். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்று பெரு வரவேற்பளித்தேன்.

ஆனால், தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் நாம் உறவாட முடியாத நிலை காணப்படுகிறது.

தமிழீழம் பிறந்தால் தென்பகுதியில் உள்ள தமிழர்கள் அனைவரும் வடக்கு - கிழக்குக்குச் செல்லும் நிலை ஏற்படும் என்று ஜே.வி.பி யின் தலைவர் கூற முடியாது. சோமவன்ச அமரசிங்க குடிவரவு குடியகல்வு சட்டத்தின்கீழ் தேடப்படுபவர்.

இத்தகைய ஒருவர் தமிழ் மக்கள் குறித்து கருத்து கூற அருகதையற்றவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிமன்ற நடவடிக்கைகளில் பொலிஸார் ஒத்துழைப்பதில்லை

## நீதிபதிகள் குற்றச்சாட்டு

கொழும்பு—

நீதிமன்ற நடவடிக்கைகளில் பொலிஸார் ஒத்துழைப்பதில்லை என நீதிபதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வத்தளை மற்றும் பாணந்துறை நீதிமன்றங்களில் இந்தக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாணந்துறை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் பிடிவிறாந்துகளை பொலிஸார் செயற்படுத்துவதில்லை என பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி மாலினி குணரத்ன குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதனால் வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்க நேரிடுவதாகவும் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப் படுத்தத் தவறியமைக்காகப் பொலிஸாருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்ய நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை நீதிமன்ற நடவடிக்கைகளை வத்தளை பொலிஸார் சீர்குலைப்பதாக நீர்கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரி.எம்.பி.யூ தென்னக்கோன் தெரிவித்தார்.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மேல் மாகாண வடபிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை நீதிமன்ற பதிவாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களுக்கெதிராகப் படையினரால் நிகழ்த்தப்படும் வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் இழுத்தடித்தும், மூடிமறைத்தும் வருவது குறித்து நீதிபதிகள் பலரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அல்லைப்பிட்டி படுகொலைகள் குறித்த விசாரணைகளை திசை திருப்பும் வகையில் பொலிஸார் நடந்து கொண்டதை ஊர்காவற்றுறை நீதிமன்றம் சுட்டிக்காட்டி கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிராமங்களை பாதுகாக்க 2500 ஊர்காவல் படையினர்

கொழும்பு—

கெப்பிற்றிக்கொல்லாவவிலுள்ள குடியேற்றக் கிராமங்களை பாதுகாப்பதற்கு 2500 பேருக்கு ஆயுதப்பயிற்சி வழங்குவதற்கு வடமத்திய மாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஆயுதப் பயிற்சி பெற்ற அணியை உருவாக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுர மாவட்டத்தில் வசிக்கும் எவரும் இந்தப் படையணியில் இணைந்து கொள்ளமுடியும் என வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிறேம்லால் திசநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி பெற்றவர்கள் ஒரு காலத்தில் அரசாங்கத்தில் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்றும், இவர்களுக்கு விடுமுறைகள் வழங்கப்படும் என்றும் மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம்

கொழும்பு—

ஜனாதிபதி சட்டத்தரணியாக சாந்தா அபிமன்னசிங்கம் நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - 9 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகப் பதவிப் பிரமாணம் செய்தனர்.

சாந்தா அபிமன்னசிங்கம் யாழ். சட்டத்தரணிகள் ச[illegible]ந்தின் தலைவராக நீண்டகாலமாக சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெற்றோல் விலையை அதிகரிக்க வேண்டுகோள்

கொழும்பு—

பெற்றோலின் விலை மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கு ஏற்ப 1 லீற்றர் பெற்றோல் 104 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

விலையை அதிகரிக்க வேண்டுமா அல்லது குறைக்க வேண்டுமா என்பதற்கு அமைச்சரவையே அங்கீகாரம் வழங்கவேண்டும். பெற்றோலின் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை என கனியவள அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

உலக சந்தையில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்படுவதாகவும் அதற்கேற்ப பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பெற்றோல் விலையை அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பதுளையில் யுவதி கைது!

கொழும்பு—

பதுளை வைத்தியசாலையில் மருத்துவ மாதுவாகச் செயற்பட்ட இளம் யுவதியை வைத்தியசாலைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்ட யுவதி மேலதிக விசாரணைகளுக்காக பதுளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த யுவதி மருத்துவமாது எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு செயற்பட்டுவந்ததாகத் தெரியவருகிறது.

## 2000 கிராம அலுவலர்கள் விரைவில் ஆட்சேர்ப்பு

கொழும்பு—

வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கென 2ஆயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்கள் விரைவில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் கிராம சேவை உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்னர், பெறுபேறுகளுக்கமைய கிராம உத்தியோகத்தர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் ஆயிரத்து 997 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. தற்போது 14 ஆயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிவினைவாதத்தை இல்லாமல் செய்ய அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு—

இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் தமிழ் பிரிவினை வாதத்தை இல்லாமல் செய்யலாம் என இந்திய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் அனைத்து தரப்பினரும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

ஆளும் கட்சியும், ஐ.தே. கட்சியும் தமது உள் முரண்பாடுகளை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரப்பகிர்வை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கின்ற போதும் - ஜே. வி. பி., ஹெல உறுமய கட்சியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

பெரும்பாலான சிங்களவர்கள் சமஷ்டி முறை பிரிவினைவாதத்துக்கான வழிகோலாகும் என கருதுகின்றனர். சிங்கள அரசியல்வாதிகள் சிலர் சமஷ்டி முறையை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்து வருகின்றனர்.

இவை அனைத்தும் விடுதலைப் புலிகளின் விருப்பு வெறுப்பிலேயே தங்கியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ராஜா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கை யிலும் ஒரே தின வெளியீடு



வடிவேல், தேஜாஸ்ரீ, மனோரமா, நாசர் மற்றும் பலர் நடித்த

இம்சை அரசன் 23ம் புலிகேசி

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

**மனோகரா யாழ்ப்பாணம்**

மூன்றாவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டு பயலே
(புதிய வெளியீடு)

காட்சி நேரம் 10.30,2.30,6.30.

# படையினரின் கெடுபிடிகளை நிறுத்துமாறு கண்காணிப்புக் குழுவிடம் எழிலன் வலியுறுத்து

திருகோணமலை —

தமிழ் மக்கள் மீதான அரச படைகளின் கெடுபிடி செயற்பாடுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு கோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊவே ஜோன்சனிடம் வலியுறுத்தியுள்ளார்.



திருகோணமலை மாவட்ட அரசியற் துறைச்செயலகத்தில் சி.எழிலனுக்கும், ஊவே ஜோன்சனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணிமுதல் 12.15 மணிவரை நடைபெற்றது.

படைக் கெடுபிடி நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணப்பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் அரசு எந்தவகையிலும் முன்னின்று செயற்படவில்லை. இந்த நிலையில் பொது அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் முன்வந்து நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்காகப் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து பொருட்களைக் கொண்டு வர முற்படும் போதிலும் அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் - தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை - மருத்துவ தேவை உட்பட்ட அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து படை ஆக்கிரமிப்புப் பகுதிக்குச் சென்று வரும் மக்கள் உயிர் அச்சுறுத்தல் களுக்கு உட்பட்டு வருகின்றனர்.

இதேபோல படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களும் உயிர் அச்சுறுத்தலுடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

படையினரின் இந்தச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இடம் பெயந்து வாழும் மக்கள் தமது நிவாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சி.எழிலன் ஊவே ஜோன் சனிடம் வலியுறுத்தினார்.

இந்த விடயங்கள் குறித்து உரிய தரப்புகளுடன் பேச்சுக்களை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாகத் திருகோணமலை மாவட்டக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 01 08 1932

அரன் அடியில் 09 06 2006

## திருமதி இன்பமலர் அழகேஸ்வரராஜா

அன்பின் உறைவிடமே! அழகுநிறை முழுமதியே!
ஒருமாதமானாலும் அவலநிலை மாறவில்லை.
நிலையில்லா வாழ்வினிலே நிம்மதியே இல்லையம்மா.
நினைவாலே வாடி நிலைகுலைந்து தவிக்கின்றோம்.
கண்ணை இமை காப்பது போல் காலமெல்லாம் காப்பாற்றி
கணப்பொழுதில் மறைந்தீரே கனிவான காவியமே!

ஊறணி தீர்த்தக்கரையில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவால் துயருறும்
குடும்பத்தினர்

வல்வெட்டித்துறை

(2314)

## பரீட்சைப் பெறுபேற்றை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம் —

பலாலி ஆசிரிய கலாசாலையில் கடந்த வருடம் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வந்துள்ளதாகவும், அதனை கலாசாலையில் பார்வையிடலாமெனவும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

## அரச அதிபர்கள் நியமனம்!

கொழும்பு —

மாவட்டச் செயலாளராகக் கடமையாற்றும் அதிகாரிகளை மீண்டும் அரசாங்க அதிபர்களாக பெயர் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு இந்தப் புதிய பெயருடன் மேலும் அதிகாரத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

மாவட்ட செயலாளர்களாக நிய மித்து 10 வருடங்களின் பின்னர் இவர்கள் அரசாங்க அதிபர்களாகப் பெயர் மாற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

solidar INGO Consortium | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Schweizerisches Arbeiterhilfswerk SAH | Norwegian People's Aid

## VACANCY

The Solidar Group, an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, is implementing a comprehensive Post-Tsunami Reconstruction & Rehabilitation Programme in the district of Jaffna and Kilinochchi. SAH/Solidar is currently looking for a

### Community Development Officer with Background in Agriculture and Natural Resource Management

The Community Development Officer will work under the direct supervision of the Project Manager for the Agriculture Sector Projects, which comprise Home Garden Development, Establishment of Greenbelt and support of other agriculture development activities, such as preparing and conducting training courses.

*His/Her tasks will be:*

- Day-to-day liaison with and awareness raising of beneficiaries.
- Support of community/village-based groups and partner organizations during project implementation, training courses.
- Assisting with the preparation and conducting of surveys, training courses and follow-up of with beneficiaries.
- Assisting with monitoring of and reporting on project progress.
- Establishing and maintaining contacts with government authorities and local NGOs/INGOs.

*Candidates must have*

- Diploma degree in Agriculture.
- Solid background in organic farming and IPM practices.
- He/she should demonstrate excellent communication skills with beneficiaries and experience of working with local communities in the North-East.
- Must be fluent in Tamil.

Application by female candidates is encouraged. The ability to communicate in English is seen as an advantage.

*Duty Station:* Kilinochchi

*Please send your CV and application letter 24th July, 2006 to:*
Ms.G. Piratheepa, SAH Administration
SAH /Solidar
156 Jaffna Road
Paranthan - Kilinochchi

(C-5444)

## வங்காலை கடற்படை தள அதிகாரியிடம் தேவாலய தாக்குதல் குறித்து விசாரணை

மன்னார் —

மன்னார் - பேசாலை வெற்றி நாயகி தேவாலயத்தில் கடற்படையினர் நடத்திய தாக்குதல் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வெற்றிநாயகி தேவாலயத்தில் வயோதிபப் பெண்மணி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டும், பொது மக்கள் 45 பேர் படுகாயப் படுத்தப்பட்டதும் தொடர்பான விசாரணை கடந்த 22 ஆம் திகதி நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அன்றைய விசாரணையின்போது வங்காலைப்பாடு கடற்படை முகாமின் கட்டளை அதிகாரி லெப். திஸநாயக்கவை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய லெப்.திஸநாயக்க நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகினார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது மன்னார் சனிவிலேஜ் படை முகாமின் லெப்.கொமாண்டர் ரோகண திஸநாயக்கவும், அவருடன் கடற்படையினர் நால்வரும் மோட்டார் சைக்கிள்களில் தமது முகாமுக்குச் சம்பவம் நடைபெற்ற நாளன்று வந்திருந்ததாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் அவர்கள் அங்கு சென்றது குறித்தும் ஏனைய விவரங்கள் குறித்தும் எதிர்வரும் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் விவ ரங்களைச் சமர்ப்பிக்குமாறும் லெப்.கொமாண்டரின் வாக்கு மூலத்தைப் பெறுமாறும் மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## அரசியலமைப்பு சீர்திருத்தம் வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு —



மேன்முறையீட்டு நீதிமன்றங்களை மாகாண மட்டத்துக்கு விஸ்தரிக்கும் 18 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலம் நாடாளு மன்றில் நிறைவேற்றப் படாததனால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 18 ஆவது யாப்புத் திருத்தச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பு அரசினால் பிற்போடப்பட்டுள்ளது. அரசியல் யாப்புத் திருத்தத்துக்குப் நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் தேவைப்படுகின்றது. ஆனால், அன்று அவ்வளவு வாக்குகள் காணப்படாமையால் இந்த வாக்கெடுப்பை அரசு தள்ளிப் போட நேர்ந்ததாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது -

இது போன்ற தேசிய நலன்களுக்காக யாப்பு மாற்றத்தை முன்வைக்கும் போது கட்சி பேதமின்றி ஆதரவு வழங்கவேண்டும். இதன் போது கட்சிவாதம் பேசுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

தற்போதைய நாட்டு நிலைமைகளுக்கேற்ப மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குவிந்துள்ள வழக்குளை விசாரித்துத் தீர்வு வழங்குவதற்கு பல வருடங்கள் எடுக்கும். இதற்கான தீர்வாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து கொழும்புக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற செயற்பாடுகளை விரிவாக்க அரசாங்கம் தீர்மானித்தது.

இதன்படி தெற்கு, மத்திய, வடமேல், வட-கிழக்கு, மேல், சப்ரகமுவ போன்ற பகுதிகளாகப் பிரிப்பதை இலக்காக வைத்துள்ளது. இந்த முறையின் மூலம் மேன்முறையீட்டு வழக்குகளுக்காகப் பொதுமக்கள் கொழும்புக்கு வரவேண்டும் என்ற கஷ்டம் நீங்கும். இதனால் நீதிமன்ற விவகாரங்களில் மக்களுக்குள்ள நம்பிக்கை கட்டியெழுப்பப்படும் நிலை தோன்றும். இது விடயத்தில் ஆதரவு தெரிவிப்பது அனைத்துக் கட்சிகளினதும் கடமையும், பொறுப்புமாகும் என தெரிவித்தார்.

# தமிழ் மாணவர்களின் நலனில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் நலனில் அரசு அக்கறையின்றி செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமீபத்தில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 9 தமிழ் மாணவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட கணினிகள் இதுவரை கையளிக்க பல்கலைக்கழகம் நடவடிக்கையெடுக்கவில்லை. அவர்கள் தனியார் விடுதிகளில் தங்கியிருந்ததைக் காரணம் காட்டி இந்த விடயத்தை பல்கலைக்கழகம் தட்டிக்கழிக்க முயற்சிக்கிறது.

பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள் இல்லாத காரணத்தாலேயே அந்த மாணவர்கள் தனியார் விடுதிகளில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கே பாதுகாப்பு வழங்க முடியாத அரசு - சாதாரண பொதுமக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கும்? தற்போது கொழும்பில் வீதிச்சோதனைகள் அதிகரித்துக் காணப்படுகின்ற சூழலில் - தமிழ் மக்கள் படையினரால் பாதுகாப்பு என்ற போர்வையில் அவமானப்படுத்தப்படுகிறார்கள்.



நாளாந்தம் தமிழ்மக்கள் கைது செய்யப்படுகிறார்கள், துருவித் துருவி விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

கொழும்பு நிலைமைகள் என்பது தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத இடமாக மாறிவிடுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# அத்தியாவசிய பொருட்கள் கூடுதல் விலையில் விற்பனை

யாழ்ப்பாணம்

நல்லூர் கூட்டுறவுச் சங்க கிளைகளில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகமாக விற்பதாக மக்கள் தெரிவித்தனர்.

ஏனைய தனியார் விற்பனை நிலையங்களை விட அதிகமான விலைக்கே பொருட்கள் இங்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அரிசி 35 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்களை வாங்கும் நுகர் வோர் விசனம் தெரிவித்தனர். (12)

# உயிர்ப்பூட்டல் குழுத்தலைவருக்கு கியூடெக் - கரித்தாஸில் பயிற்சி

யாழ்ப்பாணம்

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் உயிர்ப்பூட்டல் குழுத் தலைவர்களுக்கென முன்னெடுக்கப்பட்டு வரும் பயிற்சி நெறி - நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை கியூடெக்கின் ஜெப மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் 'தலைமைத்துவம் எதிர்கொள்ளும் அனர்த்த முகாமைத்துவமும், ஆவணப்படுத்தலும்' எனும் தலைப்பில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கான வள அணியினராக திட்ட இணைப்பாளர் செல்வி பத்மா, உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளர் ஜோசெப் பாலா, ஆ.கருணாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை உயிர்ப்பூட்டல் குழுவால் நடத்தப்படும் இளையோர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு நாளை இளவாலை போயிட்டியில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'ஆரோக்கியமான தொடர்பாடலும் தலைமைத்துவமும்' எனும் தலைப்பில் செல்வி பிறிஸ்கில்லா கருத்துரை வழங்குவார்.

# ஆசிரிய கலாசாலைகளில் 24ம் திகதி பயிற்சி ஆரம்பம்

நெல்லியடி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை, பலாலி ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய அணியினருக்கான பயிற்சிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கலாசாலை அதிபர்களுக்கான கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இந்த கூட்டத்திலே் புதிய ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிகளை 24ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பநெறி, நடனம், சங்கீதம், மனையியல் போன்ற துறைகளுக்கும் - பலாலி ஆசிரிய கலாசாலைக்கு உடற்கல்வி, கணிதம், விஞ்ஞானம், நீரியல் மீன்பிடித்துறைக்குமே ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

3 மாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாதவர்களையும் இதில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதுடன், பலாலி ஆசிரிய கலாசாலைக்கு ஆங்கில நெறிக்கான ஆசிரிய மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (12)

# திண்மக்கழிவுத் தொட்டிகளை பயன்படுத்த மக்கள் தயக்கம்!

## யாழ்.மாநகர ஆணையாளர் கவலை

யாழ்ப்பாணம்

திண்மக் கழிவுகளைச் சேகரிப்பதற்கு தொட்டிகள் வைக்கப்பட்டபோதிலும் - அதைப் பயன்படுத்தாது கழிவுப் பொருட்களை வேறு இடங்களில் கொட்டுவது கவலை அளிப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுத்தம் சுகாதாரம் என்பவற்றைப் பேணுவதற்காகவும், திண்மக் கழிவுகள் வீதிகளில் கொட்டப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் ஒவ்வொரு வீடுகளின் அருகிலும் கழிவுப் பொருட்கள் சேகரிப்பதற்கான தொட்டிகளை வைத்துள்ளது.

ஆனாலும் மக்கள் அத்தகைய தொட்டிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, தமக்கு இலகுவாக வீதிகளிலும், சந்திகளிலும் கழிவுப் பொருட்களைப் போட்டு வருகின்றனர்.

கழிவுப் பொருட்களிலிருந்து பரவும் நோய்களைத் தடுப்பதற்காகவும், நகரை நவீனமயப்படுத்தும் நோக்கத்துடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்குவதன் மூலம் கழிவகற்றும் வேலைகள் இலகுவாக்கப்பட்டு வருவதுடன் - சுகாதாரத்தையும் பேண முடியும்.

கழிவுப் பொருட்களை பசளையாக்கும் திட்டத்துக்கு யு.என்.டி.பி. நிறுவனம் பல லட்சம் ரூபா செலவில் கழிவு சேர்க்கும் பெட்டிகளை வழங்கியிருக்கும் போதும், மக்களின் பொறுப்பற்ற செயற்பாடு கவலை அளிக்கிறது.

பொது மக்கள் கழிவுப் பொருட்களைப் பெட்டிகளில் இடுவதன் மூலம் நகரை அழகுபடுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முஸ்லிம் ஆசிரிய மாணவர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்று வந்த முஸ்லிம் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயின்ற 15 ஆண் முஸ்லிம் ஆசிரியர்களும், 3 பெண் முஸ்லிம் ஆசிரியைகளுமென மொத்தம் 18 பேரே இவ்வாறு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களாவர்.

தற்போது யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக கல்வியமைச்சிடம் இடமாற்றம் குறித்து இவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இடமாற்றம் பெற்றவர்களுக்கு அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியிலும், தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியில் இதுவரை தமிழ் மற்றும் முஸ்லிம் பெண் ஆசிரியர்கள் மட்டுமே தமது கல்வியை கற்று வந்தனர்.

ஆனால், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள முஸ்லிம் ஆண் ஆசிரியர்களுக்கும் அங்கு கல்வியைத் தொடர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமாக சாராயம் விற்ற ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் 15 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்து தீர்ப்பளித்தார்.

நாவலடி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரே அனுமதிப் பத்திரமின்றிச் சட்ட விரோதமாக சாராயம் விற்றுக் கொண்டிருந்த வேளை - மதுவரித் திணைக்களத்தினர் அவரைக் கண்டுபிடித்தனர். இதனையடுத்து அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விசாரணை கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் நடைபெற்றபோது - குறித்த நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், இந்தத் தொகையை கட்டடத் தவறினால் 6 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# விசேட அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரால் இந்து சமய குருமார்களுக்கென விசேட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்துக்கமைய - சர்வதேச இந்து மத குருமார் உட்பட ஒன்றியத்தினூடாக உரிய காலத்தில் பதிவை மேற்கொண்ட சிவாச்சாரியார்கள் மற்றும் குருக்கள் உட்பட ஐம்பது பேருக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எனவே விண்ணப்பதாரிகள் நேரில் சென்று தமது விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஒன்றியச் செயலாளர் செ.சுப்பிரமணிய ஐயர் தெரிவித்தார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். பிராந்திய செயலகத்தில் வைத்து இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருவதுடன், இவற்றைப் பெறத் தவறியவர்களுக்கு தபால் மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக இந்த அடையாள அட்டையை எடுக்க விரும்புவோர் ஆனைப்பந்தியிலுள்ள சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய தலைமைச் செயலகத்தில் அலுவலக நேரத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : செ.பிரணவன்
முகவரி : யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ........................
முகவரி ........................
பிறந்த ஆண்டு ........................
கூப்பன்கள் பத்துடன்
புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



........................
பெற்றோர் ஒப்பம்


# ஆளணி உதவியாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நவம்பரில்!

யாழ்ப்பாணம்

இலங்கை வங்கி வடமாகாணத்துக்கு பயிலுனர் ஆளணி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்து, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் தெரிவித்தார்.

ஆளணி உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் பட்டியல் இலங்கை வங்கியின் வடமாகாண காரியாலயத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் இலங்கை வங்கியின் வட பிராந்திய காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யோகாசன பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்

சிவலிங்க யோக கேந்திரா நிலையம் வளர்மதி சனசமூக நிலைய ஆதரவுடன் நடத்தும் யோகாசன பயிற்சி வகுப்பு ஆரம்ப விழா - நாளை காலை 8.30 மணிக்கு கொக்குவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தின் செயலாளர் எஸ்.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் - நிலைய யோகாசன போதனாசிரியர் வி.என்.சிவனேசராசா அறிமுகவுரை நிகழ்த்துவார். யோக ஆச்சாரியார் யோகிராஜன் 'யோகமும் வாழ்வும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

மூன்று மாதங்கள் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் சிவலிங்க யோக கேந்திரா நிலையத்துடன் தொடர்பு கொள்ளு மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புகளை நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் - நாளை மாலை 8.30 மணிக்கு உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதி, கடவுள் சந்நிதியில் தேவார இசைவாணர் கே.தவராசா தலைமையில் நடைபெறும்.

# யோகன் பயிற்சிப் பாசறையில் 5 ஆவது அணிக்கான பயிற்சி



கிளிநொச்சி—

கப்டன் யோகன் பயிற்சிப்பாசறையில் ஐந்தாவது உள்ளகப்பாதுகாப்பு அணியினர் பயிற்சியை நிறைவு செய்தனர்.

பயிற்சி ஆசிரியர் நிரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை துணுக்காய் பாண்டியன்குள அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றினார்.

யோகனின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடரை போராளி கவிக்குமார் ஏற்ற, மலர்மாலையை அரசியல்துறைப் போராளி தாடி ஏற்றினார்.

பயிற்சியின் போது போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கருத்துரையை துணுக்காய் பாண்டியன்குள கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் நிகழ்த்தினார்.

இதில் 200 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சியை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழினம் மீதான இன அழிப்புக்கு மக்களே பதிலடி கொடுப்பார்கள்!

## மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

மன்னார்—

இனிவரும் காலங்களிலும் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகள் தொடருமானால் மக்களே தக்க பதில் கொடுக்கும் காலம் உருவாகியுள்ளது என்று மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜோன்சன் பயிற்சிப் பாசறையின் நான்காவது அணிக்கான பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழின அழிப்பு நடவடிக்கையை தொடராக தமிழீழத் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அரச படைகள் மேற்கொண்டு வருகின்றன. இதற்கெல்லாம் முடிவு கட்டப்படும் காலம் நெருங்கியுள்ளது.

தமிழ் மக்கள் அனைவரும் தமது பாதுகாப்பைத் தீர்மானித்துக் கொள்கின்ற அளவுக்கு வலுவான நிலையை இன்று எட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அரச படைகளின் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கை தொடருமாக இருந்தால், தக்க பதிலைக் கொடுக்க வல்லவர்களாக எமது மக்கள் மாறியுள்ளனர். இனி வரும் காலங்களில் இது நிரூபிக்கப்படும். தமிழ் மக்களின் ஒருமித்த எழுச்சி காரணமாகவே ஆழ ஊடுருவல் படையினரின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன எனத் தெரிவித்தார்.

மன்னார் கடற்புலிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஜோன்சன் பயிற்சிப் பாசறையின் நான்காவது அணிக்கான பயிற்சி நிறைவு நிகழ்வுக்கு பயிற்சியாளர் கிருபன் தலைமை தாங்கினார்.

பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தளபதி லக்ஸ்மன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றினார்.

லெப்.கேணல் இளங்கதிரின் திருவுருவப்படத்துக்கு மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கவிமதி ஈகச்சுடரேற்றினார்.

மலர்மாலையை மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் றென்சில் அணிவித்தார்.

கருத்துரைகளை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புராஜ், இனியவன், றென்சில் மற்றும் தளபதி லக்ஸ்மன் ஆகியோர் நிகழ்த்தினர். இதன் பின்னர் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# வடமராட்சி கிழக்கில் விசேட பற்சிகிச்சை

கிளிநொச்சி—

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலையில் தமிழீழ சுகாதார சேவையினரால் விசேட பற்சிகிச்சை நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் பற்சிகிச்சை முகாமில் பெருமளவான மக்கள் பயனடைந்தனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் செயற்பாட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைய நாட்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டதை அடுத்து அவற்றைப் பிடித்து நஞ்சூட்டி அழிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியும் ஏற்றப்பட்டு வருகின்றது. (கு)

# விடுதி இன்மை; தாதியர் சிரமம்!

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவ தாதி விடுதி இன்மையால் மருத்துவ தாதியர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனைக்கு தூர இடங்களிலிருந்து வரும் தாதியர் விடுதியின்மையால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் மருத்துவ சேவையும் பெரும் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# நடமாடும் மருத்துவ சேவையால் 1700 பேருக்குச் சிகிச்சை!

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் மருத்துவ சேவை மூலம் கடந்தமாதம் ஆயிரத்து 700பேர் பயன்பெற்றனர்.

ஜெயபுரம், காசீம்பூங்கா, தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு, சாந்தபுரம், குமார்பூங்கா, புதுமுறிப்பு, நாகபடுவான், நாச்சிக்குடா, வசீகரன் பூங்கா, செந்தளிர் இல்லம், இனிய வாழ்வு இல்லம், வெற்றிமனை, குருகுலம், சோழர்பூங்கா, அன்புமனை, தர்மபுரம், பாரதிஇல்லம் ஆகிய இடங்களில் கடந்த மாதம் தமிழீழ சுகாதாரசேவை நடமாடும் சேவைகளை புரிந்து மக்களுக்கு சிகிச்சையளித்தது.

நடமாடும் பற்சிகிச்சை நிலையம் மூலம் 701 பேருக்கு பற்சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

உடுத்துறை, முல்லைத்தீவு, மல்லாவி, நாச்சிக்குடா, உடையார்கட்டு, வன்னேரி, வேரவில், முழங்காவில் ஆகிய இடங்களில் பற்சிகிச்சை கடந்த மாதத்தில் வழங்கப்பட்டது. (கு)

# கண்ணகைபுரத்தில் 29 குடும்பங்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மானியத் தொகை வழங்கல்!

கிளிநொச்சி—

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் - கண்ணகைபுரம் கிராமத்தைச் சேர்ந்த 29 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக மானியத் தொகைகளை அண்மையில் வழங்கியுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர், போரூட், சொலிடார் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் 5 லட்சத்து 38 ஆயிரத்து 600 ரூபா செலவில் இந்த மானியம் வழங்கப்படவுள்ளது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - இந்த திட்டம் தொடர்பாக போரூட் நிறுவன கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் எம்.ஏ.சுதர்சன், சொலிடர் நிறுவனத்தைச் சேர்ந்த வை.ஜஸ்ரின் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இதனையடுத்து பயனாளிக்களுக்கான மானியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இதன்படி பசு வளர்ப்புக்கென 6 பேருக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 800 ரூபாவும், ஆடு வளர்ப்புக்காக 5 பேருக்கு 95 ரூபாவும் சிறு வியாபாரம் மேற்கொள்ள 2 பேருக்கு 37 ஆயிரம் ரூபாவும், விவசாயம் மேற்கொள்ள 12 பேருக்கு 2 லட்சத்து 20 ஆயிரத்து 800 ரூபாவும், தையல் தொழிலுக்கு 2 பேருக்கு 36 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

# மக்கள் கட்டுமான பயிற்சி

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்ட தட்டையர் மலையில் மக்கள் கட்டுமானப் பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

தட்டையர்மலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரரின் தந்தை கறுப்பையா ஏற்றினார்.

தேசியக் கொடியை வலயப் பொறுப்பாளர் பிரியன் ஏற்றினார். பயிற்சி ஆசிரியர் ஆனந்தரூபன் பயிற்சிகளை நெறிப்படுத்தினார். இந்த மக்கள் கட்டுமானப் பயிற்சியில் பெருமளவான மக்கள் பயிற்சியை பெற்று வருகின்றனர். (கு)

# விக்னேஸ்வரா வித்தியாலய இரண்டு மாடி கட்டடம் திறப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி - பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இரண்டுமாடி புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் ஞானசீலன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அதிபர் தி.இராசநாயகம் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை பூநகரி பிரதேச தமிழீழ சுகாதாரசேவை இணைப்பாளர் அ.ரவிச்சந்திரன் ஏற்றினார்.

அலுவலகத்தை தி.இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா உட்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (கு)

# எக்ஸ்-ரே தொகுதி அன்பளிப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவில் வைத்தியசாலைக்கு ஜப்பானின் அம்டா நிறுவனம் எக்ஸ் கதிர் உபகரணத் தொகுதியை வழங்கியுள்ளது.

அம்டா நிறுவனம் முழங்காவில் வைத்தியசாலையில் வார நாட்களில் எக்ஸ் கதிர்ச் சேவையை வழங்கி வந்தது.

ஆனால், நிறுவனத்தின் சேவைக் காலம் முடிவடைந்த நிலையில் அந்த நிறுவனம் பயன்படுத்திய எக்ஸ் - கதிர் உபகரணத் தொகுதியையே வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையில் பணியாற்றும் இரண்டு ஊழியர்களுக்கும் எக்ஸ் கதிர் தொடர்பான முழுமையான பயிற்சியையும் இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

# எவ்வித வசதியுமின்றி இயங்கும் முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மகாவித்தியாலயம் எவ்வித வசதிகளுமின்றி இயங்கி வருவதால், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தாக்குதல்கள் மற்றும், சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தப் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான இடம் ஒதுக்கப்பட்டு, கட்டடத்தைக் கட்டுவதற்கு தொண்டு நிறுவனமொன்று முன்வந்த போதிலும் இதுவரை கட்டடம் கட்டப்படவில்லை. இதனால் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மிகவும் சிரமத்துடனேயே மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# முத்துவிநாயகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடத்திவரும் ஒட்டுசுட்டான் முத்துவிநாயகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் முன்பள்ளித் தலைவர் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- பொதுச்சுடரை சத்தியவதி ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை போராளி வசந்தன் ஏற்றினார்.

தொடர்ந்து மாணவர்களின் விளையாட்டுப் போட்டியும், அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (கு)

# முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டல்

கிளிநொச்சி—

போரூட் மற்றும் நொராட் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடனும் இயங்கி வரும் மணியங்குளம் ஐயனார் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் அமைக்கப்படும் இந்த முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு - அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அக்கராயன் பிரதேச உதவிப்பணிப்பாளர் சி.கே.நல்லையா அடிக்கல்லை நாட்டி வைத்தார். இந்த முன்பள்ளி 12 லட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

- திருக்குறள்

## நமது நோக்கு

# சுத்தமான நகரம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வைக்கப்பட்டிருக்கும் திண்மக்கழிவுத் தொட்டிகளில் - பொதுமக்கள் குப்பைகளைப் போடாமல், தமது வசதிப்படி வீதிகளில் போடுவதாகவும், -

இதனால் நகரைச் சுத்தமாக வைத்திருப்பதில் பெரும்பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் மாநகர ஆணையாளர் கவலை தெரிவித்திருக்கிறார்.

இரண்டு தசாப்த யுத்தத்தால் சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடந்த யாழ்ப்பாண நகரம் - இப்போதுதான் மெல்ல மெல்லப் புதுப்பொலிவு பெற்றுவருகிறது.

இடிந்த கட்டடங்களையும், சிதைவுகளையும் அகற்றி - புதிய கட்டடங்கள் ஆங்காங்கே முளை கொள்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் யாழ். நகரின் எழிலையும், சுகாதாரத்தையும் பேணுவது மாநகரவாசிகள் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

இன்றைய நவீன உலகில் எத்தனையோ அழகான நகரங்களுக்கு மத்தியில் - நாம் யாழ்ப்பாண நகரை எத்தகைய அழகுடன், சுத்தத்துடன் வைத்திருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஏனைய நாடுகளின் சிறந்த நகரங்களைப் போன்று எமது நகரையும் கொண்டுவருவது அவசியம்.

இப்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை இதற்கு தடையாக இருக்கின்றது என்பது ஒரு புறம் இருக்க, இப்போதுள்ள சூழலில் இருக்கும் வசதிகளைக் கொண்டு நாம் நகரை எழிலோடும், சுத்தத்துடனும் வைத்திருக்க முயற்சிக்க வேண்டும்.

எத்தனையோ நாடுகளில் பொது இடங்களில் சிறிய கழிவுக்காகிதத்தைக்கூட வீதியில் போடுவதற்கு தடை இருக்கிறது. வீதியில் எச்சில் துப்பினால் தண்டனை விதிக்க சட்டம் இருக்கிறது.

ஆனால், இதுபோன்ற இறுக்கமான கட்டுப்பாடுகள் எமது நாட்டில் இல்லாமல் இருப்பதுகூட - அலட்சியப்போக்குடன் பலரும் இருப்பதற்கு காரணமாக இருக்கலாம்.

ஆனால், இப்படிப்பட்ட சட்டங்கள் மூலம் எமது நகரங்களை சுத்தமாகவோ, எழிலுடனோ வைத்திருக்க முடியாது. ஒவ்வொருவரும் சுய பொறுப்பை உணர்ந்து செயற்படுவதன் மூலமே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும்.

சாதாரணமாக திண்மக்கழிவுத்தொட்டிகளை வைத்திருக்கும்போதே அதைப் பயன்படுத்தாமல் - தமது விருப்பப்படி குப்பைகளைப் போடுகின்ற எம்மவர்களை திருத்துவது சுலபமல்ல.

எமது வீடு சுத்தமாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பவர்கள் - எமது வீட்டின் முன்புறம், எமது வீதி, எமது நகரம் என்ற பரந்த சிந்தனையை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.


இப்படிப்பட்ட சிந்தனை உருவாகினால்தான் - யாழ். நகரைச் சுத்தமாக வைத்திருக்க முடியும். அதேவேளை, யாழ். நகரைச் சுத்தமாக பேணுவது மிகவும் முக்கியமானது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

அடுத்த சில மாதங்களில் பருவமழை பெய்யத் தொடங்கிவிடும். அப்போது, தொற்றுநோய் அபாயம் தீவிரமடையும். அசுத்தமான நகரம் நிச்சயம் தொற்றுநோய் ஆபத்துக்குட்படும்.

இதைத் தடுக்கத்தான் திண்மக் கழிவகற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதை உணர்ந்து யாழ். நகரவாசிகள் ஒவ்வொருவரும் கழிவுகளை உரிய இடத்தில் கொட்டுவது மட்டுமன்றி, எதிர்காலத்தில் தூய்மையாகவும், நகரைப் பேணுவதற்கு முன்வர வேண்டும்.


267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# யுத்தத்தை ஆரம்பிக்க கோருவோர் யதார்த்தத்தை சிந்திக்க வேண்டும்

## ராஜித சேனாரட்ண தெரிவிப்பு



கொழும்பு—

விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கோரும் ஜே.வி.பி யுத்தத்தை ஆரம்பிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது.

ஆனால், நாம் யுத்தத்தை ஆரம்பிக்கும் அளவுக்கு தயாராகவுள்ளோமா என்டதனை யதார்த்த பூர்வமாக சிந்திக்க வேண்டுமெனவும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய ராஜித சேனாரட்ண எம்.பி மேலும் கூறுகையில் -

யுத்தத்தை ஆரம்பிக்குமாறு ஜே.வி.பி உறுப்பினர்கள் கோருகின்றனர். ஆனால் யுத்தத்தை எதிர்கொள்ளுமளவுக்கு நாம் தயாராகியுள்ளோமா?

யுத்தத்துக்கு மருத்துவமனைகளும், தொடர்பாடல் வசதிகளும், முக்கியமானவர்களுக்கான பாதுகாப்பும், எல்லைக் கிராம மக்களின் பாதுகாப்பும் தயாராக இருக்கின்றதா? சமாதான செயற்பாடுகள் விடயத்தில் அரசாங்கம் உண்மையாக செயற்படுகின்றதா?

விமல் வீரவன்ச புலிகளைத் தடை செய்யுமாறு கோருகிறார். அமைச்சர் கெகலிய ரம்புக்வெல புலிகளை தடை செய்யமாட்டோம் என்று கூறுகிறார்.

போர்நிறுத்த உடன்படிக்கையை எதிர்த்து எழுதும் சுவரொட்டிகளை ஜனாதிபதி மாளிகையிலும், அமைச்சர் கெகலிய ரம்புக்வெலவின் இல்லத்திலும் ஜே.வி.பியினர் ஒட்ட வேண்டும்.


ஜே.வி.பி.யினர் யுத்தத்தைக் கோருகின்றனர். ஆனால், ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜயவீர பேச்சைமட்டுமே வலியுறுத்தினார்.


ஜே.வி.பியின் கோரிக்கை யுத்தவாதமாகவே இருந்தாலும் ஜனாதிபதி புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று கூறுகிறார்.

ஜனாதிபதி இனப்பிரச்சினை விடயத்தில் ஒரு அடி முன்வைத்துள்ளார். அவருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறோம்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா போன்று வெளிநாட்டு ஊடகங்களுக்கு ஒரு கருத்தையும், உள்நாட்டு ஊடகங்களுக்கு வேறு கருத்தையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூற மாட்டார் என்று நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணில் - மகிந்த விசேட சந்திப்பு





கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்பமான சூழ்நிலை மற்றும் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 18 ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்துக்கு ஐ.தே.கட்சியின் ஆதரவு பெறுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 5C ஆயிரம் பேர் இடம்பெயர்வு

## யு.என்.எச்.சி.ஆர். தெரிவிப்பு

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் அண்மைய மாதங்களில் மாத்திரம் சுமார் 50 ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி உள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானி அறிவித்துள்ளது.

மொத்தமாக 14 ஆயிரத்து 139 குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரத்து 661 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகப் பேச்சாளர் லிங்டன் ஜெப்லஸ் தெரிவித்தார்.

கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்த அவர் - மன்னாரில் மக்கள் முழுமையாக தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறாதபோதும் பெருமளவானவர்கள் இரவுப் பொழுதில் மாத்திரம் முகாம்களில் தங்கியுள்ளதாகவும், காலை வேளைகளில் வீடுகளுக்குத் திரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக அண்மைக் கால இடப்பெயர்வுகளையடுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மொத்தத் தொகை 3 இலட்சத்து 14ஆயிரத்து 328ஆக அதிகரித்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

# ஹென்றிக்சன் சந்திப்பு

கொழும்பு—

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் கண்காணிப்புக் குழுவின் பிராந்திய அலுவலகத் தலைவர்களை தம்புள்ள ஹொட்டல் ஒன்றில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பிராந்திய அலுவலகத் தலைவர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் கண்காணிப்புக் குழுவிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் பிரஜைகள் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விலகிக் கொள்ள வேண்டும் என புலிகள் விதித்துள்ள நிபந்தனை குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை, பிராந்திய பிரதிநிதிகளின் கருத்துக்களையும் ஹென்றிக்சன் கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலவச ஆங்கில பயிற்சி வகுப்புகள்

கொழும்பு—

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இலவசமாக ஆங்கிலப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகிறது.

இதன்படி மூன்றாவது தொகுதிக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் உயர்தர வகுப்பு மாணவர்களை சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள லயன் எம்.பி.சண்முகநாதனிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

# ஈழத் தமிழர் சோகத்தில் ரஜினி, கமல் அமைதி ஏன்?


## கொதிக்கிறார் தங்கர்பச்சான்!

**இலங்கையில் ஏற்பட்டிருக்கும் யுத்த அபாயத்தால் தனுஷ்கோடி, ராமேஸ்வரம் கடற்கரைகளில் தினந்தினம் அகதிகளாக ஈழத் தமிழர்கள் வந்து குவியும் துயரம் தொடர்கிறது. இந்தநிலையில் இயக்குநர் தங்கர்பச்சான், தன் உணர்வுகளை நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார் சோகமும், கோபமுமாக...**

"அகதி... இந்த ஒரு சொல்லுக்கு உள்ளே எவ்வளவு பெரிய சோகம் புதைஞ்சு கிடக்கென்று எல்லாருக்கும் தெரியுமா? அந்த வலி யாருக்காச்சும் புரியுமா?

சில விநாடிகள் நிலநடுக்கம் வந்தா எப்படி உயிர் பதறி ஓடுகிறோம்! நம்ம பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் இருந்து வர அரை மணி நேரம் தாமதமானால் கூட எப்படித் தவிக்கிறோம்! ஆனா, சொந்த மண்ணை, உறவுகளை, உடைமைகளை இழந்து பாதி உயிரா படகில் வந்து விழுறாங்களே நம் சகோதரர்கள், அவங்க நிலையை நினைச்சுப் பார்த்திருக்கோமா? ஒரு சொட்டுக் கண்ணீர், ஒரு வாய் உணவு, ஒரு ரூபாய் நிதின்னு ஏதாவது செஞ்சிருக்கோமா?

அய்யா, ஈழ விடுதலைப் போராட்டத்தில் உங்களுக்கு ஒரு கருத்து இருக்கும். எனக்கு ஒரு கருத்து இருக்கும்... அதை விடுங்க. ஆனா, உயிருக்குப் போராடி பிள்ளை, குட்டிகளோட வந்து காப்பாத்துங்கன்னு கதறலோட கரை ஒதுங்குறானே நம்ம சகோதரன்...அவனுக்கு நாம என்ன செய்யணும்னு ஒரு நிமிஷம் யோசிக்க வேணாமா?



"அப்பா எங்கே இருக்கார்னு பிள்ளைக்குத் தெரியாது... பிள்ளை உயிரோட இருக்கானா, இல்லையான்னு கூட அம்மாவுக்குத் தெரியாதுன்னு இருபது வருடங்களுக்கு மேலா வலியே வாழ்க்கையா உலகம் முழுக்கக் கிடக்காங்க ஈழச் சகோதரர்கள். அந்த அவல வாழ்க்கையைப் பற்றி நமக்கு என்ன தெரியும்?

இங்கே இருந்து இருபது மைல் தூரத்தில் நம்ம சகோதரன் சாகிறானேங்கிற எந்த வலியும் வருத்தமும் இல்லாம, நாம டி.வி சனலுக்குப் போன் போட்டுப் பாட்டுக் கேட்டு உட்கார்ந்திருக்கோம். எனக்கு அந்தச் சகோதரர்களின் வலி முழுசா தெரியும். காரணம் - ஈழத்தமிழ் சகோதரர்களின் வாழ்க்கையை மையமா வெச்சு 'தாய்மண்' என்று ஒரு திரைப்படத்தை இயக்க நினைச்சிருந்தேன். அதுக்காக உலகம் முழுக்கப் போய் நூத்துக் கணக்கான அகதிகளைச் சந்திச்சேன். இலங்கைக்கே போய் அந்த மக்களைப் பார்த்தேன். அந்தப் படம் மட்டும் இந்நேரம் வந்திருந்தால், என் மக்களே திரண்டு பெருங்குரல் கொடுத்திருப்பாங்க. ஓங்கி ஒரே குரலா ஒலிச்சிருக்கும். அந்த மாதிரி படைப்புகள் வராததுதான் தமிழனோட சாபக்கேடு.

**"ஏன் அந்தப் படம் இன்னும் ஆரம்பிக்கலை?"**

"ஏங்க, என்ன சொல்றீங்க?" இங்கே பெரியாரைத் திரைப்படமாக்கவே தயாரிப்பாளர் கிடைக்கலீங்க. பொறுக்கி, ரௌடி, தாதா, சமூக விரோதியைக் கொண்டாடுற படங்களை மட்டும்தானே இப்போ எடுத்திட்டிருக்காங்க. எங்கே பார்த்தாலும் எட்டு கொட்டகையிலேயும் அந்தப் படங்கள்தானே ஓடுது! துருப்பிடிச்ச நம்ம சிந்தனையையே மறுபடி உயிர்ப்பித்த, நம்ம சமூகத்துக்கே பகுத்தறிவு ஒளிகாட்டிய பெரியாரைப் படமா எடுக்கப் பணம் போட ஆள் இல்லைங்க. பெரியாரா நடிக்கக்கூட அந்த உணர்வுள்ள சத்யராஜ்தான் ஆர்வமாக வந்தார். நாகம்மை, மணியம்மையாக நடிக்க ஒரு கதாநாயகியும் வரமாட்டேங்கிறாங்க. இதுதான் இங்கே நிலைமை.

உலகம் முழுக்க எல்லா மொழிகளிலும் அவங்க வரலாற்றை, பண்பாட்டை, கலாசாரத்தைச் சொல்ற திரைப்படங்கள் இருக்கு. நாமதான் வரலாறே இல்லாம எழுபது வருஷமா படமெடுத்துட்டு இருக்கோம். தமிழகம் முழுக்க 55ஆயிரம் அகதிகள் இருக்காங்க. ஒவ்வொருத்தருக்குள்ளேயும் எவ்வளவு கதைகள் இருக்கு. அதை ஏன் ஒரு படைப்பாளி கூட உண்மையான சினிமாவாக்கலை? வரலாற்றையும் பண்பாட்டையும் ஒதுக்கிவிட்டு குத்துப்பாட்டு, அருவா, துப்பாக்கிச் சண்டைன்னு போனா யாருக்கு நஷ்டம்?"

**"இலங்கை போய் வந்த அனுபவத்தைச் சொல்லுங்களேன்..."**

"அங்கே போய்ப் பார்த்த பிறகுதான் நாம எவ்வளவு வசதியான நல்ல வாழ்க்கை வாழறோம்னு தெரிஞ்சுதுங்க."

மின்சாரம் கிடையாது. சாலை கிடையாது. மருத்துவம் கிடையாது. விவசாயம் கிடையாது. செழித்து வளர்ந்த மண் இப்ப கந்தக பூமியாகக் கிடக்கு. எங்கே பார்த்தாலும் பள்ளம் பள்ளமா இருக்கு. இங்கே தான் பள்ளிக்கூடம் இருந்துச்சு. இங்கே தான் நூலகம் இருந்துச்சுன்னு பள்ளங்களைக் காட்டுறாங்க.

ஒரு கவிஞனோட வீட்டுக்குப் போனேன். பத்துக்கு எட்டு சைஸ் அறையில் 13 பேர் வாழறாங்க. ஒரே ஒரு விளக்கு இருக்கு. அந்த வெளிச்சத்தில் ஒவ்வொருத்தரா வந்து தன் முகத்தைக் காட்டி, அறிமுகப்படுத்திக்கிறாங்க. ஒரு குட்டிப்பையன் மட்டும் எழுந்து வராமல் அப்படியே படுத்துக்கிடந்தான். விளக்கை எடுத்துட்டுப் போய்ப்பார்த்தா, கையும் இல்லை, காலும் இல்லை. "கண்ணி வெடியில் சிக்கிட்டான்னு" சொல்றாங்க. அய்யோ...! அப்படியே எனக்கு உடம் பெல்லாம் ஆடிப்போச்சுங்க. அந்தக் குடும்பத் தில் மட்டும் இப்படி மொத்தம் ஆறுபேர் ஊனமா இருக்காங்க. இப்படி ஒவ்வொரு வீட்டிலேயும் மரணம். விதவிதமான துயரம்.

அவங்களுக்கும் நம்மைப்போல பெரியாரும், காமராஜரும்தான் ஆதர்சம். பாரதியைத்தான் கொண்டாடுறாங்க. முருகனைத் தான் கடவுளா கும்பிடுறாங்க. ஆனா, பயங்கரமான வாழ்க்கையை வாழ்ந்துட்டிருக்காங்க. அப்படித் துன்பப்பட்டு வர்றவங்களுக்கு நாம் என்ன செய்றோம்?

அவங்க 'அண்ணா'ன்னு கூப்பிடும்போது அப்படியே எனக்கு உயிரே நடுங்குது. அவங்க கஷ்டத்தைப் போக்க என்ன பண்ணியிருக்கோம்? அங்கே இன்னும் கலை உயிரோடு இருக்குங்க. ஒரு கண்ணு இல்லை, கை இல்லை... அதோட குறும்படங்கள் எடுக்கிறாங்க. படம் பார்த்தீங்கன்னா, நெஞ்சை அடைக்குது. எப்பவுமே ஒடுக்கப்பட்ட இனத்திலேர்ந்துதான் வீரியமான கலைகள் பிறக்கும். பேரழிவுகளைச் சந்திச்ச யூத இனத்திலேர்ந்துதான் ஸ்டீஃபன் ஸ்பீல்பெர்க் வந்தார். அப்படி இனிமே ஈழத்தமிழர்கள் வருவாங்க. எந்தத் தொழில்நுட்ப வசதியும் இல்லாம அவங்க எடுக்கிற படங்களைப் பார்த்தால்தான் நம்ம லட்சணம் நமக்கே புரியுது.

இங்கே தமிழ்நாட்ல எல்லாம் இருக்கு. மாத்தி மாத்தி மண்டையைக் குழப்ப, ஆளாளுக்கு ஒரு சனல் வெச்சிருக்கான். நாலு ஷோ சினிமா ஓடுது. கோயில் திறக்கிறதுக்கு முன்னாடி சாராயக் கடை திறந்திடுறான். எப்பவும் செல்போன்லயே அநாவசியமா பேசிட்டு அலையுறான். அப்புறம் எப்படி நல்ல விஷயத்தைச் சிந்திப்பான்? சூடு சொரணை இல்லாத ஒரு தமிழ்ச் சமூகத்தை உருவாக்கிவிட்டு இருக்கோம். இது ஈழத் தமிழ்ச் சகோதரர் களை நாம் அரவணைக்க வேண்டிய நேரம் மட்டுமில்லை, அவர்களிடமிருந்து கத்துக்க வேண்டிய நேரமும் கூட!"

**"ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் தமிழ் நாட்டின் மீடியா, இலக்கியம், கலைத்துறை, அரசியல்வாதிகளின் அணுகுமுறை எப்படி இருக்கிறது?"**

"ஐயோ! போங்க! படகு கவிழ்ந்து 60 ஈழத் தமிழர்கள் இறந்தார்களெங்கிறது இங்கே ஒரு சின்ன செய்தி. அவ்வளவு தான்! யாரு பொண்டாட்டியை யாரு வெச்சிருக்கான். இன்னிக்கு என்ன கள்ளக்காதல் கொலை, கஞ்சா கேஸ் என்னாச்சு, எந்தக் கோயிலுக்குள்ளே யார் போனாங்கன்னு வேறு எதைப்பத்தியும் சிந்திக்கவிடாம, மக்களைத் தவறான முறையில் ஊடகங்கள் வழி நடத்துது. ஈழத்தில் இவ்வளவு பிரச்சினை நடக்குதே... எந்த ஒரு தொலைக்காட்சியிலாவது ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி அரை மணி நேரம் காட்டறாங்களா? ஒரு சமூகத்தின் மிகப் பெரிய பிரச்சினையைப் பேசாத ஊடகங்கள் அந்தச் சமூகத்துக்கே துரோகம் செய்கிறதுன்னுதானே அர்த்தம்? எப்போ பார்த்தாலும் ஏதாவது நடிகர், நடிகைகிட்டே போய், யாரைக் காதலிக்கிறீங்க, எப்போ கல்யாணம்? இதே கேள்விகள்தான். ஈழப் பிரச்சினை பத்திக் கேளுங்க. கேக்கணுமா இல்லையா?

ஊடகங்கள் இப்படின்னா. கலைத்துறை இன்னும் மோசம். ஈழத் தமிழர்களை நகைச் சுவைக் காட்சிக்குத் தான் இவங்க பயன்படுத்துவாங்க. இல்லைன்னா அங்கேயிருந்து ஒரு பெண்வர்றா. அவளுக்குக் காதல் இன்லேன்னா, பிரச்சினை என்னன்னே புரியாம மேம்போக்கா எதையாச்சும் எடுக்குறது. என்னங்க நடக்குது இங்கே?

அப்புறம் நம்ம நடிகர்கள் - பெரிய ரசிகர்கள் கூட்டத்தை வெச்சிருக்கிற நடிகர்கள் இதுவரைக்கும் இந்தப் பிரச்சினையில் என்ன பண்ணி இருக்காங்க? இந்த மாதிரி எரிகிற பிரச்சினையில் உங்க அணுகுமுறை என்ன? அதைச் சொல்ல வேண்டாமா? நீங்க அனுபவிக்கிற வசதி வாய்ப்புகள் தமிழ்நாட்டு மக்கள் மட்டும் கொடுத்ததில்லை. உலகம் முழுக்க இருக்கிற ஈழத் தமிழர்களும் கொடுத்ததுதானே? மண்ணை இழந்து அடக்கப்பட்டு, அவமானப்பட்டு, கேவலப்பட்டு தன் உயிரையே உருக்கி அவன் சம்பாதிக்கிற பணத்தை ஆளாளுக்குப் போய் கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பிடுங்கிட்டு வர்றீங்கள். அப்போ அவங்களுக்கு ஒரு கஷ்டம்னா, அதுக்கு என்ன பண்றதுன்னு யோசிக்க வேண்டியதும் உங்க பொறுப்பா? இல்லையா?

இப்போ இருபது கோடி, முப்பது கோடின்னு போட்டுப் படமெடுக்கிறீங்களே... யாரை நம்பி? இந்தியாவுக்கு வெளியே உலகமெல்லாம் வாழ்கிற ஈழத் தமிழர்கள் உருவாக்கியிருக்கிற சந்தையை நம்பித்தானே? அப்போ துயரத்திலும் நீங்க பங்கெடுக்கணுமா இல்லையா?

ரஜினி, கமலெல்லாம் ஒரு வார்த்தை சொன்னா, அதைக் கேட்கவும் எடுத்துச் செய்யவும் எவ்வளவோ பேர் இருக்காங்க. அவங்ககிட்ட நிறைய மக்கள் பலம் இருக்கு. ஏன் பேச மாட்டேங்கிறாங்க? ஒவ்வொருத்தருக்கும் ஒரு அரசியல் பார்வை இருக்கணும். சமூகப் பிரச்சினையோட தங்களை இணைச்சுக்கணும். சும்மா மார்லன் பிராண்டோ நடிப்பைப் பத்தி சிலாகிச்சா மட்டும் போதுமா?

ரஜினி, கமல், விஜயகாந்த், விஜய், விக்ரம், அஜீத், சூர்யான்னு ஆரம்பிச்சு இன்னிக்கு இருக்கிற ஆர்யா, பரத் வரைக்கும் ஒவ்வொருத்தரும் இந்தப் பிரச்சினையில் தங்கள் கருத்து என்ன என்பதைப் பத்திரிகைகள் மூலமா தெரிவிக்கணும். ஒரு படம் முடிச்சுட்டு, துட்டை அள்ளிட்டு, ஆயில் மசாஜ் எடுக்கவும், இமய மலைக்கும், ஓய்வெடுக்க வெளிநாட்டுக்கும் போனா நாங்க எங்கே போறது? மனச்சாட்சி வேண்டாமா? நம்ம மக்களுக்கு ஒரு துன்பம் வரும் போது அதுக்கான பொறுப்பு வேண்டாமா? இந்தப் பிரச்சினையைக் கண்டுக்காம இருக்கோமேன்னு ஒரு குற்ற உணர்ச்சி வேண்டாமா?

கார்கில்ல போர்னா தமிழ் நாட்டில் இருந்து ஏராளமான நிதி கொடுக்றோம். கோயில்ல அன்னதானம்னா நிதி கொடுக்றோம்... எல்லாம் நல்ல விஷயம்தான்! அதெல்லாம் போல இதுவும் ஒரு பிரச்னை. உயிர்ப் போராட்டம் உதவி பண்ண வேண்டாமா? நம்ம உணர்வைக் காட்ட வேண்டாமா? ஈழத் தமிழர்களுக்காகப் பேசுங்க. அகதி முகாம் களுக்குப் போய்ப் பாருங்க. அதுதான் மனிதாபிமானம்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை மருத்துவர் தமிழ்க்குடிதாங்கி போராட்டம் நடத்துறார். தோழர் தொல்.திருமாவளவன் கூட்டம் போடுறார். ஆனா, எல்லோரும் ஒண்ணு சேர வேண்டாமா? அரசியல் பகைமை, கோபங்களெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்படி ஒரு நெருக்கடியான சூழலில் ஒரே குரலில் பேசலைன்னா, அப்புறம் எதுக்குப் பொது வாழ்க்கை?

சென்னை மயிலை - மாங்கொல்லையில் தோழர் திருமாவளவன் அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்ருந்தார். இதைத் திருமாவளவன் நடத்தினா என்ன? யார் நடத்தினா என்ன...? விஜயகாந்தே நடத்தினால் தான் என்ன? எல்லோரும் வாங்க. மத்திய அரசுக்கு இந்தப் பிரச்னையின் வீரியத்தைப் புரியவைப்போம்.

திருமாவளவன் என்னிடம் கூட்டம் சம்பந்தமா பேசினார். ரஜினியில் தொடங்கி திரையுலகில் முக்கியமானவங்க எல்லோருடைய தொலைபேசி எண்களையும் அவருக்குக் கொடுத்தேன். நானே அழைக்கிறேன். அவங்க எல்லோரும் வரட்டும் என்றார். எல்லோரும் வாங்க. உங்க ரசிகர்களையும் வரச்சொல்லுங்க. சினிமா, அரசியல் கூட்டம் என்றால் அடிச்சுப் பிடிச்சுக்கூடுறோமே.. இங்கே எல்லோரும் வாங்க. ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ், சீனாவின் தியான் மென் சதுக்கங்களில் போராட்டக் காலங்களில் கூடிய கூட்டம் மாதிரி லட்சக்கணக்கான பேர் திரண்டு, தமிழ் இனத்தின் ஒற்றுமையைச் சொல்வோம்.

முப்பதாண்டு காலமா அனைத்தையும் இழந்து அடக்குமுறையில் சிக்கி, அநாதைகளாக, அகதிகளாக அலைந்து திரியும் நம் சகோதரர்களின் கண்ணீரை, மத்திய அரசுக்கும், உலகுக்கும் புரியும்படி எடுத்துப் போவோம். கூட்டத்துக்கு வரமுடியாதவங்க, குறைந்த பட்சம் பிரதமருக்கு ஒரு தந்தியாவது அனுப்பலாம். இந்த நேரத்திலும் இதைச் செய்யலைன்னா அது தமிழ் இனத்துக்கு நாம செய்கிற துரோகம்!'

**'இது சாத்தியம்தானா?'**

'இப்படியே இருந்தா, தமிழ் இனத்தையே தடம் தெரியாம அழிச்சிடுவாங்க. நம் நதிகளை எடுத்துக்குங்க. காவிரியை கர்நாடகம் பிடிச்சு வெச்சிருக்கு. முல்லைப் பெரியாறு விஷயத்தில் கேரளா பிரச்னை பண்றாங்க. பாலாறுக்குக் குறுக்கே அணை கட்ட ஆந்திரா முயற்சி பண்ணுது. இங்கே ஓடுற தாமிர பரணியை வெளிநாட்டு குளிர்பான நிறுவனங்கள் நாசம் பண்றாங்க. ஒரு நதியைக் கூட தமிழன் உருப்படியா காப்பாத்த முடியலியே... இதெல்லாம் எதனால? நம்மகிட்டே ஒற்றுமை இல்லை. மயக்கத்திலேயே திரியுறான் தமிழன். கிரிக்கெட்ல தோத்தா, ஜெயிச்சா கூடிக் குடிக்கிற சமூகமா ஆகிட்டோமே! அரசியல் கட்சிகளிடமோ பொதுநல விஷயங்களில் ஒற்றுமை இல்லை. அப்புறம் மக்களிடம் எப்படி வரும்? நதி நீர் பங்கீட்டில் தொடங்கி, ஈழத் தமிழர் பிரச்னை வரை அத்தனை கட்சித் தலைமையும் ஒன்றாக நிக்கணும். அப்போதான் தமிழன் உருப்படுவான்" என்கிற தங்கர் - பக்கத்திலிருக்கும் பெரியார் படத்தை உற்றுப் பார்த்துவிட்டு நிமிர்கிறார்.

இதை விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்குமான சண்டையாப் பார்க்காம, ஒரு இனம் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருக்க இடமின்றி அலைகிறதேங்கிற மனிதாபிமானத்தோட எல்லாரும் பாருங்க. அகதிகளா இல்லை. நம்ம சகோதரர்களா அவங்க வாழ்க்கையை மீட்டெடுத்துத் தரவாங்க. இல்லைன்னா, வருங்காலம் நம்மை மன்னிக்காது!"

ராஜுமுருகன்

**நன்றி - ஆனந்தவிகடன்**

# தேச நலன் காக்கும் நயினை தாயே



தேரேறிவருகிறாள் நாகபூஷணி
தேசநலன் காக்கிறாள் நாகபூஷணி
போரோய வைக்கிறாள் நாகபூஷணி
புதுவாழ்வைத் தருகிறாள் நாகபூஷணி
ஊர்கூட்டி வருகிறாள் நாகபூஷணி
உரிமைகளை சேர்க்கிறாள் நாகபூஷணி
சீர்பெருக்க வருகிறாள் நாகபூஷணி
சித்திரத் தேரேறிவருகிறாள் நாகபூஷணி

அ.கலாநிதி

# தேர் ஏறிவரும் நயினை தாயே

தேர்நிறைந்த திருக்கோலம் தெவிட்டாக்காட்சி
தெய்வீகப் பேரூற்றால் சிலிர்க்கும் சிந்தை
ஊர்பலவும் நிறைந்தனவோ உமையாள் பக்தி
ஊறி எழும் பெருக்கதுவோ என்னமோ
அஞ்ஞான இருள் கடிந்தே அருளும்மம்மை
அஞ்சலிப்பார் அருகிருந்தே அணைக்கும் அன்னை
கொஞ்சும் மொழி கேட்டருளும் கோவில் வீதி
குலவி வலம்வரும் பதினைந்து நாட்கள்
சப்பரம் தேர் தீர்த்தமுடன் தெப்பமென்னும்
சால்புயர்ந்த உலாவரும் பேர் விழாக்கள்காண
எப்புறமும் இருந்தடியார் இனிதுவந்தே எண்ணிலாராய்க்
கூடிவரும் எழில் தேர்காட்சி
அப்பன் சேர் அம்மை நாகபூஷணிப்பேர்
அருளாக்கை இருந்த வாறிவ்வாறோவென்று
எப்போதும் எவ்வூரும் ஏந்திநிற்கும்
இறைவி திருத்தாள் வாழ் ! வாழ்க என்றும்.

கு.மேகலா

# தேரேறி வரம் அருள்வாய்!

பொங்கியெழும் அலை மீது தங்கியருள் தாயே
பூரணியே ! பூங்கவியே உன்னருளை வேண்டி
தங்குதடை பல தாண்டித் தமிழரெலாங் கூடி
தன்னருளைப் பெற்றிடவே நயினைதனை நாடி
சங்கினொரு முத்துவிளை சாகரத்தைத் தாண்டி
த ஞ்சமென வந்தடைந்தார் தமிழினத்தைக் காக்க
தெங்கினொரு வேம்புவன்னிச் சோலைவளர் தாயே
தேரேறித் தமிழரிடர் தீர்க்க வரம் அருள்வாய்!

கவிஞர் நயினை இராகுலன்

# வண்ணை வீரமாகாளி வரமருள தேரேறி வருகிறாள்

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கே
அமுதம் அளித்த வீரமாகாளியே
நோற்றார் மனதில் நினைத்ததை யெல்லாம்
நொடியில் அளிப்பவள் நீயே
கூற்றாம் வறுமையைக் கொன்று
செல்வத்தைக் கொழிக்கச் செய்திடும் குயிலே
மாற்றார் மனதில் மயக்கத்தை அறுத்து
மாற்றம் தந்திட தேரேறி வருவாய்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

# தேர்மீது வந்தே திருவருள் தருவாயம்மா

வண்ணையில் அமர்ந்திருக்கும் வடிவழகியே தாயே
வணங்கியே துதிக்கின்றோம் வரமது தந்தருள்வாய்
கண்ணையிமை காப்பதுபோல் காத்தருளும் தேவியே
கரங்குவித்தோம் அம்மா வீரமாகாளியே தாயே
பெண்ணையிடப்பாகம் வைத்த பெருமானின் சக்தியே
போரது நீக்கியே அமைதியைத் தந்திடுவாய்
வெண்ணையுண்ட வாயான் மருமகனைப் பெற்ற காளியே
தேர்மீது வந்தே திருவருள் தருவாயம்மா!

ஸ்ரீ.நிதர்சன்



சங்கரத்தை - சின்னம்மா வித்தியாசாலையின் நிறுவுனர் தினமும்- பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது மாணவிகள் பாடசாலை கீதம் இசைப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை.எங்கரசு, அதிபர் வெ.இராஜகுமார், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்களையும் காணலாம். (48)

# சிப்பாயின் துப்பாக்கி வெடித்ததில் நெல்லியடி நகரில் பரபரப்பு!

நெல்லியடி—

நெல்லியடி நகர்ப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் தரப்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வீதிப்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தது.

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதையடுத்து நெல்லியடி நகர்ப்பகுதியில் வீதிப்பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஏனைய இராணுவத்தினர் உடன் வீதிகளை தடைசெய்து மக்களை நடமாடவிடாது தடுத்தனர். சில படையினர் துப்பாக்கி வேட்டு சத்தம் கேட்ட பகுதிகளை நோக்கி துப்பாக்கிகளை தயார்ப்படுத்திக்கொண்டு ஓடிச் சென்றனர்.

இராணுவத்தினர் அல்லோல கல்லோலப்பட்டு ஓடித்திரிந்ததையடுத்து அங்கு நின்ற மக்கள் பயப்பீதி அடைந்தனர்.

பின்னர் சக இராணுவச் சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்த சம்பவம் தெரியவந்ததும் படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பியதுடன் தடுத்து வைத்திருந்த மக்களை வீதிகளில் மக்களை நடமாட அனுமதித்தனர்.

இதேவேளை, நேற்றுக்காலை 8.30 மணியளவில் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மகாத்மா வீதியோரமாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த 3 கைக்குண்டுகளை மீட்டதாகப் படையினர் தெரிவித்தனர். (12)

## கைக்குண்டுத் தாக்குதல்

பருத்தித்துறை—

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை நுழைவாயிலிலுள்ள சோதனைச் சாவடிமீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 7.35 மணியளவில் இடம்பெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலையடுத்து பதிலுக்குப் படையினரும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் - கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் உள்ள குடியிருப்புகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது எவரும் கைதுசெய்யப்படவில்லை. அத்துடன் வீடுகளுக்குச் சென்ற படையினர் சந்தேகத்துக்கிடமானவர்கள் எவரின் நடமாட்டம் இருப்பின் தங்களுக்குத் தகவல் தருமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதலால் சேதம் ஏதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

## கூட்டம் ஒத்திவைப்பு

கிளிநொச்சி—

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் மற்றும் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் - இந்தக் கூட்டங்கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தில் கடந்த கல்வியாண்டில் கணனிக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு - இல.200, சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தில் கடந்த கல்வியாண்டில் கணனிக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்து கொண்ட 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு ஐ.பி.எம்.எஸ் நிறுவனத்தின் தலைவர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. அத்துடன் கடந்த கல்வியாண்டில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கான சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

ருஷாந்தினி சேவாமிர்தம், மதனி செல்வரட்ணம், பிரஷாந்தி இந்திரகுமார், மேரி சண்முகம் ஆகியோர் சிறப்பு விருது பெறவுள்ளனர்.

## அலங்கார உற்சவம்

வேலணை—

சரவணை - கொட்டாங்காடு ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. தொடர்ந்து உற்சவம் பத்து தினங்கள் நடைபெறும்.

இறுதி நாள் நிகழ்வு பொங்கல் வைபவத்துடன் ஆரம்பமாகி, சுவாமி வீதி வலம்வரும் நிகழ்வும் இடம் பெறும்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

உளவளத் துணையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை பத்து மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சான்றிதழ் பயிற்சி பெற்ற அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.


## வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யாழ் மாவட்டம்

### பதவி வெற்றிடங்கள்

யாழ் மாவட்டத்தில் யுனிசெவ் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில்கீழ் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)**

வேதனம்: மாதாந்தம் ரூபா 12000/-

தகைமைகள்:

1. G.C.E. (A/L) சித்தி
2. மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதி (Lisence) பெற்றிருத்தல்.
சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் (பதில் விடுமுறை வழங்கப்படும்)
3. அரச சார்பற்ற நிறுவனமொன்றில் வேலை செய்த அனுபவம்.

விண்ணப்பதாரிகள் தங்கள் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையை 14.07.2006 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்
இல. 63 பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-2225932

[C/5448]



## மரண அறிவித்தல்

### அமரர் ஆ.க.மதியாபரணம்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட **ஆ.கந்தையா மதியாபரணம்** 07.07.2006 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி உருத்திரசிங்கம் தம்பதிகளின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சரத் பஞ்சாட்சரம் (நாதன்), சரத் விஜயானந்தன் (மோகன் - ஜெயசக்தி பாரவூர்தி உரிமையாளர்), கோமளவதனி (நோனா), சரத் தர்மரட்ணம் (கண்ணன் - மகாராசி சில்க்ஸ் உரிமையாளர், யாழ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலட்சுமி (வசந்தி), வசுமதி, சசிதரன் (ராசி சில்க்ஸ், நல்லி சில்க்ஸ் - உரிமையாளர், யாழ்ப்பாணம்), ரஜிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிகா, மிதுன்ராஜ், அபிஷேக், சதுஷன், ஹரிஷன், ஹர்சிகா, சஜித், மதுஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
T.P: 0777 286247

[2315]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காங்கேசன் தடுப்பு முகாமிலுள்ளோரை உறவினர்கள் சென்று பார்வையிடலாம்!

## யாழ்.படைத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற கைதிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் ஊடாக உறவினர்கள் பார்வையிடலாம் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற படையினரின் கெடுபிடிகள் தொடர்பாக யாழ். மனித உரிமைகள் அமைப்புக்களின் அதிகாரிகளை யாழ்.படைத்தளபதி நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே காங்கேசன்துறை தடுப்பு முகாமில் இருக்கின்ற கைதிகளை உறவினர்கள் பார்வையிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி க.சுவேந்திரராசா, சட்டத்தரணி றெமீடியஸ், விசாரணை அதிகாரி மொறின் றிஷ்ராஜினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடையாக இருக்கின்ற படையினர் தொடர்பான விபரங்கள் தரப்படுமாயின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் ஏதாவது விசாரணை மேற்கொள்ள வேண்டுமாயின் அனுமதியை பெற்று விசாரணை மேற்கொள்ளலாம்.

அதேவேளை, பொதுமகன் ஒருவர் கைது செய்யப்பட்டாலோ அல்லது தாக்கப்பட்டாலோ அது பற்றிய விபரங்களை மனித உரிமைகள் அதிகாரிகள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு தெரிவிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கறுப்புத் துணியால் முகமூடி அணிந்து படையினர் கடமையில் ஈடுபட்டால் அது பற்றிய விபரங்களை மக்கள் தமக்கு தெரிவிக்கும்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என யாழ்.படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மீனவர்கள் தொழில் செய்வதற்கு வழங்கப்பட்ட பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொழில் செய்யவேண்டாம் எனவும், கடற்படையினரின் படகுகள் வருகின்றவேளை மீனவர்கள் அதற்கு அண்மித்த பகுதிகளில் செல்வதை இயன்றளவு தவிர்த்துக்கொள்ளும்படியும் அவர் தெரிவித்தார்.

நபர் ஒருவர் கைது செய்யப்படும்போது கைது செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தி, உறுதிச் சீட்டை வழங்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தரணி தெரிவித்த ஆலோசனைகளுக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# பஸ் சாரதியை தாக்கிய சிப்பாய் இடமாற்றம்!

யாழ்ப்பாணம் —

கொக்குவில் சந்தியில் இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் சாரதியை தாக்கிய சிப்பாய் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் கொக்குவில் சந்திப் பகுதியில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து பஸ் சாரதி படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிப்பாய் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவரது செயற்பாடுகள் குறித்து இராணுவத் தலைமையகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பவதினம் தாக்கப்பட்ட சாரதிக்கும் வேறு இடங்களில் தாக்கப்பட்ட பஸ் சாரதி மற்றும் நடத்துனர்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என மனித உரிமை ஆணைக்குழு சட்டத்தரணி கேட்டபோது அதற்கு யாழ். படைத்தளபதி கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.


# சடலம் கரையொதுங்கியது!

கொழும்பு —

புத்தளம் - உடப்பு கரையோரப் பிரதேசத்தில் சடலம் ஒன்று கரையொதுங்கி இருப்பதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று கரையோரத்தில் இந்த சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் அடையாளம் காணமுடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் பாரிய நிலக்கண்ணிவெடி மீட்பு



மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரில் பாரிய நிலக்கண்ணிவெடி ஒன்று நேற்றுப் பிற்பகல் 11 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டு படையினரால் மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்கு அண்மையில் கள்ளியங்காடு வீதியில் - சுமார் 40 கிலோ எடை கொண்டதும், சிட் 4 ரக உயர் சக்தி வெடிமருந்து நிரப்பப்பட்டதுமான இந்த வெடிகுண்டு மீட்கப்பட்டது.

பிளாஸ்ரிக் கொள்கலன் ஒன்றில் தயாரிக்கப்பட்ட இந்தக் குண்டுடன் தொலைவில் இருந்தே குண்டை வெடிக்க வைக்கும் சாதனம், இரண்டு பற்றரிகள் என்பனவும் இணைக்கப்பட்டிருந்தன.

இராணுவ வாகனத் தொடரணியை இலக்கு வைத்தே இந்தக் குண்டு புதைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

அண்மையில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதித்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோது - இந்தக் குண்டு மண்ணில் புதைக்கப்பட்டு மூடப்பட்டுக் கிடந்ததாகவும் கூறப்படுகிறது.

## காணாமற்போன...

ஏப்ரல் 27 இல் கொழும்பில் கைதான நாவற்குழியைச் சேர்ந்த வடிவேல் தயானி.

ஏப்ரல் 25 இல் கொழும்பில் கைதான காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தசாமி ஜெய்சங்கர்.

ஏப்ரல் 25 இல் கொழும்பில் கைதான பண்டத்தரிப்பைச் சேர்ந்த நவரட்ணம் சத்தியசீலன்.

ஏப்ரல் 27 இல் கொழும்பில் கைதான உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த அரியராஜா சிவாஜினி.

மே 27 இல் கொழும்பில் கைதான சங்கானையைச் சேர்ந்த திருநாவுக்கரசு நாயனார் அசோகன்.

ஜனவரி 12 இல் தெல்லிப்பளையில் கைதான மல்லாகத்தைச் சேர்ந்த இரட்ணம் ஆனந்தராஜா.

ஏப்ரல் 20 இல் கைதான கதிரவேலு ராகவன் ஆகியோரே தென்னிலங்கை சிறைகளில் வைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

# விசாரணைக் குழு நியமனம்

கொழும்பு —

இராணுவத்தின் பிரதித்தலைமை அதிகாரி லெப்.ஜெனரல் பரமி குலதுங்க தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு - ஒரு நபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிபதி எதிரிசூரிய இந்த விசாரணைக் குழுவில் இடம்பெற்றுள்ளார். இந்த விசாரணைக் குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நியமித்திருப்பதாகவும் - பொதுமக்களிடம் இருந்து இந்தப் படுகொலை குறித்த தகவல்களை எதிர்பார்த்திருப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# மற்றொரு சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் கைது!

கொழும்பு —

லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவின் படுகொலை தொடர்பாக மற்றொரு சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

பரமி குலதுங்கவின் கொலை தொடர்பாக இதற்கு முன்பும் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பரமி குலதுங்கவின் கொலை தொடர்பான பல தகவல்கள் வெளியாகிவருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பருத்தித்துறை...

பகுதியில் படையினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்திய வேளை, கட்டடத்தொழிலாளிகள் ஆறுபேரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக தெரியவருகிறது. (12)

## புளொட்...

பாதுகாப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புளொட் உறுப்பினரான ராஜா பிரேம்குமார் (வயது 31), நடைபாதை வியாபாரி அருணாசலம் சண்முகராசா (வயது 41) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## ஆயுதக்...

வெளியாகியிருந்தன.

அமெரிக்காவின் புஷ்மாஸ்ரர் மற்றும் இஸ்ரேலின் ராபேல் நிறுவனத்தின் 30 மி.மீ.பீரங்கிகளை கொள்வனவு செய்வது குறித்து பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நிலையில் சீனாவிடம் இருந்து 30 மி.மீ.பிரங்கிகளை கொள்வனவு செய்வது - மங்கள சமரவீரவின் சீன விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று கூறப்படுகிறது.

இவை கடற்படையின் அதிவேக தாக்குதல் படகுகளில் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்னேரியா...

ஜெயபுரவெல என்ற இடத்தில் கால்நடையாக ரோந்து சென்ற படையினரே நேற்றுப்பிற்பகல் 1.45 மணியளவில் கண்ணி வெடியைக் கண்டுபிடித்தனர். பின்னர், இந்தக் கண்ணி வெடி செயலிழக்கச் செய்யப்பட்டது.

# வாகனங்களுக்கு புலிகள் கவசமிடுவதாக சந்தேகம்!

கொழும்பு —

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு பெருமளவு இரும்புத் தகடுகளும், வெல்டிங் குச்சிகளும் கொண்டு செல்லப்படுவதால் -

கிளைமோர் தாக்குதல்களில் பாதிக்கப்படாத வகையில் புலிகள் வாகனங்களுக்கு கவசமிடுகின்றனரா என்ற சந்தேகம் படையினருக்கு எழுந்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக இந்த இரும்புத் தகடுகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் வன்னிப் பிரதேசத்துக்கு இரும்புத் தகடுகள் கொண்டுசெல்வதற்கு அனுமதியளிக்கப்படாததுடன், அவற்றை கொண்டு சென்ற லொறிகளும் கொள்கலன்களும் திருப்பியனுப்பப்பட்டன.

அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட இரு கொள்கலன்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வியாழக்கிழமை ஓமந்தை சோதனைச்சாவடியூடாக வன்னிக்குச் சென்றுள்ளன.

அனுமதி பெறப்பட்டுள்ள இந்த தகடுகளை சேர்த்து ஒட்டவைப்பதன் மூலம் எந்த அளவைக் கொண்ட கிளைமோர் குண்டுக்கும் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையிலான தகரங்களைத் தயாரிக்க முடியும் என இராணுவ பொறியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## புலிகளின்...

கூறப்படும் புதூர் - கதிரவெளியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் என்பவரே புலிகளிடம் சிக்கினார்.

இவரிடமிருந்து கிளைமோர் ஒன்றும் வயர்ரோல் மற்றும் வெடிக்க வைக்கும் கருவி என்பவற்றை புலிகள் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது.

கருணா குழுவின் முக்கியஸ்தரான சீலன் என்பவரே தன்னைத் தாக்குதலுக்கு அனுப்பியதாகவும் - அவர் தற்போது பண்டார என்ற பெயரில் செயற்படுவதாகவும் பிடிபட்ட கருணா குழு உறுப்பினர் தெரிவித்தார்.

## கிளாலியில்...

சம்பவத்தில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் ஆபத்தான நிலையில் பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# ஈழத்தமிழர்களுக்கு...

நடிகர் மன்சூர் அலிகான் முதலில் கோரிக்கை முழக்கங்கள் ஒலிபெருக்கியில் முழங்க, அதைத் தொடர்ந்து பேரணியில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் ஒருங்கே முழங்க விண் அதிர கோஷம் எழுப்பினர்.

இந்திய அரசே! இந்திய அரசே!

சிங்கள அரசின் இனவெறிக்கு துணைபோகாதே! துணைபோகாதே!

ஈழத்தமிழரைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறிக் கும்பலுக்கு இராணுவ உதவிகள் செய்யாதே!

தமிழக அரசே! தமிழக அரசே ஈழத்தமிழரைக் காப்பாற்ற இந்திய அரசை வற்புறுத்து

என்பன போன்ற பல கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பேரணி அண்ணாசாலை வழியாக வந்து காமராசர் சாலை வழியே மயிலாப்பூர் மாங்கொல்லையை அடைந்தது.

நேற்றிரவு 7 மணிக்கு பேரணி நிறைவுபெற்றதும், ஈழத்தமிழர் பாதுகாப்பை வலியுறுத்தும் மாபெரும் அனைத்துக்கட்சி பொதுக்கூட்டம் மாங்கொல்லையில் நடைபெற்றது.

UNIT பிரத்தியேகப்படுத்துகின்றது
Hardware Networking
வேகப் பயிற்சி நெறி (பாடத்திட்டம் மாற்றமில்லாமல்)
Just Rs. 1000/- Only
2 வாரத்தில் ஒரு முழுமையான தொழிற்பயிற்சி
Just Rs. 1500/- Only
நீங்கள் எம்முடைய குறுகிய காலப் பயிற்சியில் இணைவதன்மூலம்
❖ பெருமிதம் கொள்ளவைக்கும் திறனாய்வுகள், ஒத்துப்பார்த்தல், திருத்துதல்.
❖ *100% Practical experience* ❖ *World's accrediated Certificate*
❖ UNITக்கென்றே பிரத்தியேகப்படுத்தப்பட்ட பாடநெறி
❖ தன்னிச்சையான கணினிக் கையாளலுக்கான 100% உத்தரவாதம்
❖ இப்போது எல்லோரும் எங்கள் வழியை பின்பற்றுமளவிற்கு முன்னணிப் போக்கு.
❖ உலகத்தரம் வாய்ந்த கல்வியை தொடர இலகு நுழைவாயில்.
இன்னும் பல...
50% சலுகை
இலவச பயிற்சிக் கோவை மற்றும் பல
For Complete Technology
எங்கள் தகைமைகள்
இந்திய பொறியியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி மற்றும் 2 தசாப்த கால இந்திய கணினித்துறை பட்டறிவு பெற்ற விரிவுரையாளர்
தாயக மண்ணில் பிரத்தியேகமாக Hardware & Networking ற்காக அமைக்கப்பட்ட ஆய்வுகூடம்
பயிற்சிக்குப் பிந்திய உதவிகளாக (புதிய தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்பு ஒழுங்கமைப்பு)
வெற்றி என்பதை சுவிகரித்தவர்கள்
Rush to Join
Limited seats Only
UNIT Education
16/1, Killnas Lane,
K.K.S. Road, Jaffna.
பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை
021 4590720
Near Jaffna Hindu College
Next Batch 10.07.2006
(B-5447)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.